கனடாவின் மூத்த தமிழ் இதழ் விளம்பரம்™ • VLAMBARAM™ Canada's Oldest Tamil Newspaper




35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 04 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 15, 2025

# ஒன்ராறியோ மாகாணப் பொதுத்தேர்தல்

2025 ஜனவரி 28ஆம் திகதி ஒன்ராறியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் (Doug Ford)இன் ஆலோசனையை ஏற்று ஒன்ராறியோ மாகாண ஆளுநர் எடித் டுமோன்ட் (Edith Dumont) ஒன்ராறியோ மாகாணத்தின் 43ஆவது சட்டசபையை கலைக்கும் பிரகடனத்தில் கையொப்பம் இட்டார். அதைத் தொடர்ந்து ஜனவரி 29ஆம் திகதி சட்டசபை கலைக்கப்பட்டு ஒன்ராறியோ மாகாணத்தின் அடுத்த பொதுத்தேர்தல் 2025 பெப்பிரவரி 27ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

2018 ஜூன் மாதத்தில் இருந்து மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் தலைமையிலான ஒன்ராறியோவின் முற்போக்கு பழமைவாதக் கட்சியின் அரசாங்கம் ஒன்ராறியோ மாகாண சட்டசபையில் ஆளுங்கட்சியாகத் தொடர்ந்து இருந்துவருகிறது. ஒன்ராறியோ சட்டசபையில் 124 ஆசனங்கள் இருக்கின்றன. பெரும்பான்மை அரசை அமைக்க ஒரு கட்சி 63 ஆசனங்களைப் பெற வேண்டும்.

2018 ஜூன் மாதத்தில் நடைபெற்ற மாகாண பொதுத்தேர்தலில் 76 ஆசனங்களையும் பின்னர் 2022 ஜூன் மாதத்தில் நடைபெற்ற மாகாண பொதுத்தேர்தலில் 83 ஆசனங்களையும் பெற்று பழமைவாதக் கட்சி தொடர்ந்து பெரும்பான்மை அரசாகவும், டக் ஃபோர்ட் மாகாண முதல்வராகவும் இருந்து வருகிறார்.

2025 ஜனவரியில் பதவியேற்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கனடிய இறக்குமதிப் பொருட்களுக்கு 25% மேலதிக சுங்கவரி விதிக்கப் போவதாக கூறி வருவதைக் காரணம் காட்டி அமெரிக்க அரசுடன் பேரம் பேசி ஒன்ராறியோ மாகாணத் தொழிலாளர்களின் வேலையைப் பாதுகாக்க தனக்கு மீண்டும் ஒன்ராறியோ மக்களின் ஆணையும், பெரும்பான்மை அரசும் தேவை எனக்கூறி மாகாண முதல்வர் டக்ஃபோர்ட் மாகாண சட்டசபையைக் கலைத்து பொதுத்தேர்தலை முன்கூட்டி நடத்துகிறார். ஒன்ராறியோ மாகாண அரசியலமைப்புச் சட்டப்படி அடுத்த மாகாணப் பொதுத்தேர்தல் 2026 ஜூன் மாதமே நடைபெற வேண்டும்.

ஒன்ராறியோ மாகாண எதிர்க்கட்சிகளை விட பழமைவாதக்கட்சி கருத்துக்கணிப்புகளில் முன்னணியில் நிற்பதாலும், பழமைவாதக்கட்சியின் நிதிநிலைமையும் எதிர்க் கட்சிகளை விடச் சிறப்பாக உள்ளதாலும் மற்றும் கனடிய மத்திய அரசிற்கான பொதுத்தேர்தல் இவ்வருடம் நடைபெற இருப்பதாலும் ஒன்ராறியோ பழமைவாதக் கட்சி முன்கூட்டியே தேர்தலை நடத்தும் என பெரும்பாலான ஊடகங்கள் 2024ஆம் ஆண்டு பிற்பகுதியில் இருந்தே ஊகங்களை வெளியிட்டு வந்தன.




ஒன்ராறியோவின் முற்போக்கு பழமைவாதக்கட்சியின் தலைவராக டக் ஃபோர்ட் 2018 மார்ச் மாதத்திலிருந்து இருக்கிறார். ஒன்ராறியோவில் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக மாரிட் ஸ்டைல்ஸ் (Marit Stiles) 2023 பெப்ரவரி மாதத்திலிருந்து இருக்கிறார். ஒன்ராறியோவின் லிபரல் கட்சியின் தலைவராக போனி க்ரோம்பி (Bonnie Crombie) 2023 டிசெம்பர் மாதத்திலிருந்து இருக்கிறார். ஒன்ராறியோவின் பசுமைக்கட்சியின் தலைவராக மைக் ஷ்ரைனர் (Mike Schreiner) 2009 நொவெம்பர் மாதத்திலிருந்து இருக்கிறார்.

25இற்கு மேற்பட்ட கட்சிகள் ஒன்ராறியோ மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், மேலே குறிப்பிட்ட நான்கு கட்சிகளுக்கு இடையேதான் பெரும்பாலும் போட்டி நடைபெறும். மாகாண சட்டசபை கலைக்கப்படும்போது அதில் இருந்த கட்சிகளின் ஆசனங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| பழமைவாதக்கட்சி | 79 |
| லிபரல் கட்சி | 28 |
| புதிய ஜனநாயகக்கட்சி | 09 |
| பசுமைக்கட்சி | 02 |
| சுயேட்சை உறுப்பினர்கள் | 06 |
| மொத்தம் | 124 |

பெப்ரவரி 27ஆம் திகதி நடைபெற உள்ள மாகாணப் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர் மனு தாக்கல் செய்யும் இறுதிநாள் பெப்ரவரி 13ஆம் திகதியாகும். இத்தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சித்தலைவர்களுக்கு இடையேயான விவாதம் பெப்ரவரி 14ஆம் திகதியும், பெப்ரவரி 17ஆம் திகதியும் நடைபெற உள்ளன.

போஸ்ட்மீடியா-லெகர் (Postmedia-Leger) என்ற நிறுவனத்தின் கருத்துக் கணிப்பின்படி பெப்ரவரி 11ஆம் திகதி மாகாண பொதுத்தேர்தல் நடைபெற்றால் ஒன்ராறியோ வாழ்மக்களில் அண்ணளவாக அரைவாசிப்பேர் டக் ஃபோர்டின் முற்போக்கு பழமைவாதக் கட்சிக்கு வாக்களித்திருப்பர் என்கிறது. அந்நிறுவனத்தின் கருத்துக்கணிப்பின் நிலவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| பழமைவாதக்கட்சி | 47% |
| லிபரல் கட்சி | 23% |
| புதிய ஜனநாயகக்கட்சி | 17% |
| பசுமைக்கட்சி | 08% |
| ஏனையவை | 05% |

ஒன்ராறியோ வாழ்மக்களில் 57%ஆனோர் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்இனுடைய கனடிய இறக்குமதிப் பொருட்கள் மீது 25% மேலதிக சுங்கவரி விதித்தல் மற்றும் கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக்குதல் போன்ற கருத்துகளுக்குத் துணிந்து எதிர்த்து நின்று பேரம் பேசக்கூடியவர் ஒன்ராறியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் எனத் தெரிவித்துள்ளனர்.

## பழமைவாதக்கட்சியின் கொள்கைகளில் சில:

* ஒன்ராறியோ வணிக நிறுவனங்கள் மீது மாகாண ரீதியாக நிர்வகிக்கப்படும் வரிகளை ஆறு மாதத்திற்கு ஒத்தி வைப்பதன்மூலம் தொழிலதிபர்களுக்கு $10 பில்லியன் உதவி வழங்கல், ஊதிய வரி நிவாரணமாக $3 பில்லியன் உதவி வழங்கல், $600 மில்லியன் முதலீடுகளை ஊக்குவிக்க வழங்கல் மற்றும் $300 மில்லியன் இயந்திர உற்பத்தி வரிவிலக்கு வழங்குதல்.

* வாகனத் தொழிலாளர் வேறுவகை தொழிற்பயிற்சி பெற $1 பில்லியன் முதலிடுதல் மற்றும் பாதிக்கப்பட்ட தொழிலில் உள்ள தொழிலாளர் மாகாணத்தில் தேவைப்படும் தொழில் துறைக்கு பயிற்சிபெற $100 மில்லியன் வேலை வாய்ப்பு நிதி முதலிடுதல்.

* ஒரு புதிய நகர்காவலர் பயிற்சிக் கல்லூரி அமைக்க $1 பில்லியன் முதலிடுதல். ஒன்ராறியோ மாகாண காவல்துறைக்கு இரண்டு புதிய H-135 உலங்கு வானூர்திகளை வழங்கி கனடா-அமெரிக்க எல்லை ரோந்து பாதுகாப்பை அமலாக்க $50 மில்லியன் முதலிடுதல்.


Progressive Conservative Party of Ontario leader Doug Ford
Thanks: Wikipedia

* மேற்கு மிசிசாகாவில் இருந்து கிழக்கு மார்க்கம் பகுதிவரை 401 நெடுஞ்சாலைக்குக்கீழ் சுரங்கவழிப்பாதை அமைத்தல்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்









RENT | BUY | SELL | INVEST | LEASE

# In CANADA from anywhere in the world

- Respectable Real Estate Brokerage based in Toronto
- Over 20 Years in the business
- Over 150 Sales Representatives.
- Brokers combined experience over 50 Years
- Well connected with Builders, Developers,
  Mortgage Brokers, Home Inspectors, Insurers ....





*For*
*more information*
*Feel Free*
*to call or*
*visit to*
*www.hlgtarealty.com*



HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

**5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2**

**Tel: 416-321-6969** * Independently owned and operated.

Vlambaram - February 15, 2025.qxp_Vlambaram-Front 2025-02-14 6:50 PM Page 3






Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

Vlambaram - February 15, 2025.qxp_Vlambaram-Front 2025-02-14 6:50 PM Page 4



# புதிய அரசின் சவால்கள்

**– அரவின் –**

அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்துக்குள்ளேயே பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கத் தொடங்கி இருக்கிறது.

நடைமுறைப் பிரச்சினைகளுக்குக்கூட சரியான தீர்வு காண வழிதெரியாமல் பிரச்சினைப்படுகின்ற சூழலை அவதானிக்க முடிகிறது.

பெப்ரவரி 09, 2025ஆம் திகதி காலை 11:23 மணியளவில் இலங்கை முழுவதும் மின்சாரம் தடைப்பட்டது பலருக்குக் காரணம் தெரியவில்லை.

சிலமணி நேரங்களுக்குப் பிறகு, பாணந்துறையில் உள்ள உப மின் நிலையத்தில் குரங்கு மோதியதில் மின்சாரம் தடைப்பட்டிருப்பதாக மின்சக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி கூறியிருந்தார். அதுபற்றி விசாரணை நடப்பதாகவும், விரைவில் மின்சாரம் மீளவழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார், அதற்கு அமைய சுமார் நான்கரை மணித்தியாலத்துக்குப் பின்னர் மின்விநியோகம் படிப்படியாக சீர்செய்யப்பட்டது.

அதற்குப்பிறகு, நுரைச்சோலையில் உள்ள அனல்மின் நிலையத்தில் மூன்று மின் பிறப்பாக்கிகள் பழுதடைந்துவிட்டதாகவும், அதனால் தேசிய மின் கட்டமைப்புக்கு சுமார் 900 மெகாவாட் மின்சாரம் கிடைக்காமல் போய் இருப்பதாகவும் அரசாங்கம் கூறியது. அதனால் அடுத்த சிலநாட்களுக்கு மின்வெட்டு அமல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு, இப்பொழுது சுழற்சி முறையில் தினமும் ஒன்றரை மணி நேரம் மின்சாரம் வெட்டப்படுகிறது.

இந்தப் பிரச்சனை ஐந்து, ஆறு நாட்களுக்குள் தீர்க்கப்படும் என மின்சார சபையும் அரசாங்கமும் கூறினாலும் நிலைமை அவ்வளவு சாதகமானதாகத் தெரியவில்லை.

இந்த மின்சாரப் பிரச்சினைக்கு குரங்கின் மீது பழி போடப்பட்டது. அது உலக ஊடகங்களில் முக்கியமான செய்தியாகவும் இடம்பிடித்தது.



ஆனால், குரங்கு மோதியது தான் பிரச்சினையா, அல்லது மின்சார பரிவர்த்தனையில் காணப்பட்ட சமச்சீரற்ற தன்மையினால் ஏற்பட்ட நெருக்கடியா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

அண்மைக் காலமாக, எதற்கெடுத்தாலும் குரங்கின் மீது பழி போடப்படுவது இலங்கையில் ஒரு வழக்கமாகவே மாறிவிட்டது.

குரங்குகள் பயிர்களைச் சேதப்படுத்துவதாக ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் குற்றம்சாட்டியதுடன், சீனாவுக்கு ஒரு இலட்சம் குரங்குகளை ஏற்றுமதி செய்யப் போவதாகவும் ஒரு தகவல் வெளியானது. அதற்கு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அப்படியான திட்டம் இல்லை என்று பின்வாங்கியது அரசாங்கம்.

இப்போதைய அரசாங்கம், தேங்காய் தட்டுப்பாட்டுக்குக் குரங்குகள்தான் காரணம் என்று கூறியது.

குரங்குகளுக்குப் பெரிய சிறைச்சாலை அமைத்து, ஆண் குரங்குகளையும் பெண் குரங்குகளையும் தனித்தனியாக அடைத்து வைத்து, அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தி இந்தப் பிரச்சினையை தீர்க்கப் போவதாக இப்போதைய அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் கூறினார்.

அதேவேளை குரங்குகள் தொடர்பான ஒரு கணக்கெடுப்பை நடத்தப் போவதாகவும் இப்போதைய அரசாங்கம் கூறியிருக்கிறது. நாட்டில் சனத்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு 13 வருடங்கள் ஆகிவிட்டன. 10 வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் இந்தக் கணக்கெடுப்பையே நடத்தி முடிப்பதற்கு இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதற்குள்ளாக குரங்குகளின் சனத்தொகையைக் கணக்கெடுக்கப் போவதாக அரசாங்கம் கூறியிருப்பது வேடிக்கையான விடயம். இந்தச் சூழலில்தான் குரங்குகளால் நாடெங்கும் மின்சாரம் தடைப்பட்டதாக ஒரு கதை கூறப்பட்டது.

சிலவேளைகளில், சீனாவுக்கு நெருக்கமான தற்போதைய அரசாங்கம், ஒரு தொகுதி குரங்குகளை, ஏற்றுமதி செய்வதற்காக, பொய்யான ஒரு கணக்கெடுப்பை நடத்தி, பொய்யான காரணங்களைத் தேடுகிறதோ என்ற சந்தேகங்களும் எழுகின்றன.

ஏனென்றால், இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற மின்சார நெருக்கடிக்கும் குரங்குகளுக்கும் பெரியளவில் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. இது மின்சாரக் கட்டமைப்பில் உள்ள பிரச்சினை.

1995ஆம் ஆண்டு கடும் வரட்சியினால் இலங்கையில் மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டு, பெரியளவில் மின்வெட்டு அமல்படுத்தப்பட்டது.

அப்பொழுது சந்திரிகா குமாரதுங்க ஆட்சியில் இருந்தார். அவர் மேற்குலகப் பாணியில், பகல் நேரத்தை மிச்சப்படுத்துவதற்காக, நேரமாற்றத்தை அறிவித்து, ஒரு மணித்தியாலத்தைச் சேமிக்க முற்பட்டார்.

அதற்குப் பின்னர், பெரியளவிலான மின்சாரத் தட்டுப்பாடும், தடையும் ஏற்பட்டது, கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில்தான். அதற்கு முக்கியமான காரணம், கடும் வரட்சி. அதனால் நீர்மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

அதேவேளை டொலர் பற்றாக்குறை நெருக்கடியினால் அனல்மின் உற்பத்திக்கு தேவையான நிலக்கரியையோ எண்ணெயையோ பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

மக்களின் அன்றாட வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய மின்வெட்டு, ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னரே படிப்படியாகக் குறைக்கப்பட்டு இல்லாமல் செய்யப்பட்டது.

இப்பொழுது நாட்டில் போதுமான அளவு மழை பெய்து, நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்கள் நிரம்பி இருக்கின்றன.

அதுதவிர அனல் மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியும் எண்ணெயும் கையிருப்பில் இருக்கிறது. அவற்றை உடனடியாக இறக்குமதி செய்வதற்கான பணமும் இருக்கிறது.

ஆனால் மின்சார விநியோகக் கட்டமைப்பில் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு யார் காரணம்? அல்லது என்ன காரணம் என்று இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. இது இப்போது அரசாங்கத்திற்கு உள்ள மிகப் பெரிய சிக்கலாகும்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அஜித பெரேரா எட்டு வாரங்களாக ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுதல் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்கப்பட்டு வந்ததன் விளைவுதான் இதுஎனக் கூறியிருக்கிறார்.

மின் பயன்பாடு குறைந்து, மின்சார உற்பத்தி அதிகரித்திருக்கின்ற சூழல், தேவைக்கும் விநியோகத்துக்கும் இடையிலான சமநிலையை பேண முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் விளைவாகவே மின்சார விநியோகத்தில் தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டிய அரசாங்கம் அதனைச் செய்யாமல், அதுபற்றிய உண்மையைக் கூறாமல், குரங்குகளின்மீது பழிபோட்டுத் தப்பிக்க முற்பட்டது.

அதைவிட, முன்னைய அரசாங்கம் சூரிய மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க மின் சக்தி மூலங்களை தேசிய மின் கட்டமைப்பில் இணைத்ததுதான் பிரச்சினைக்கு காரணம் என்றும் கூறியிருக்கிறது.

போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அதனை முன்னைய அரசாங்கம் செய்திருக்கவில்லை என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த அரசாங்கம் முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின்மீது பழிபோட்டு, குற்றச்சாட்டுகளை அடுக்கி, அவற்றை எல்லாம் தாங்கள் நிவர்த்தி செய்வதாகக் கூறி, மாற்றத்தை ஏற்படுத்துவதாக வாக்குறுதி கொடுத்தே ஆட்சிக்கு வந்தது என்பது யாவருக்கும் தெரியும்.

அப்படியானால், ஆட்சிக்கு வந்தவுடன் மாற்றங்களைச் செய்திருக்க வேண்டும். பழைய தவறுகளைத் திருத்தியிருக்க வேண்டும். புதிதாக பாதுகாப்புக் கட்டமைப்புகளை ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

அதனைச் செய்யாமல் விட்டுவிட்டு, பிரச்சினை ஏற்பட்டதும் முன்னைய அரசாங்கம் செய்த தவறு என கூறிக் கொள்வதே இந்த அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களின் வழக்கமாகிவிட்டது.

அரிசித் தட்டுப்பாட்டுக்கும் அவ்வாறே கூறினர். தேங்காய்த் தட்டுப்பாட்டுக்கும் அதையே கூறினர். மின்சார நெருக்கடிக்கும் அதையே கூறுகின்றனர்.

கடந்த காலங்களில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதெல்லாம் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன.

அந்தப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு, முன்னதாக ஆட்சியில் இருந்த கட்சியின் மீதோ, அரசாங்கத்தின் மீதோ பழியைப் போட்டுக் கொள்வது வழக்கம்.

அந்த வழக்கத்திலிருந்து மாறாத வகையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் செயற்படுவதுதான் ஏமாற்றம்.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM™

35ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# ஒன்ராறியோ.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மற்றும் 407 நெடுஞ்சாலைக்கு அருகில் சரக்குகளை ஏற்றிச் செல்லத் தொடருந்து பாதை அமைத்தல்.

* மாகாணத்திற்கு சொந்தமான 407 நெடுஞ்சாலைக் கட்டண வசூலிப்பை நிறுத்துதல் மற்றும் வாகன எரிபொருளுக் கான வரிக்குறைப்பான லீட்டருக்கு 5.7 சதம்ஆக இருக்கும் தற்காலிக குறைப்பை நிரந்தரமாக்குதல்.

## லிபரல் கட்சியின் கொள்கைகளில் சில:

* நடுத்தர வருமான வரிவரம்பை 22%ஆக குறைத்தல் மற்றும் வீட்டை வெப்பமூட்டும் எரிபொருள், மின்சாரப் பாவனை ஆகிய வற்றிற்கு HST வரியை விலக்குதல்.



Liberal Party of Ontario Leader Bonnie Crombie
Thanks: Wikipedia

* உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கான குடும்ப மருத்துவர்களை நியமிப்பதன்மூலம் நான்கு ஆண்டுகளுக்கு அனைத்து ஒன்ராறியோ வாழ்மக்களுக்கு குடும்ப வைத்தியர் கிடைக்கச் செய்தல்.

* மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களை வாங்குவோருக்கான நுகர்வோர் தள்ளு படியை (Consumer Rebates) மீண்டும் கொண்டு வருதல்.

* ஒன்ராறியோவின் ஊனமுற்றோர் ஆதரவு திட்ட உதவியை இரண்டு மடங்காக்குதல்.

* அமெரிக்காவில் பணிபுரியும் கனடிய மருத்துவர்கள் மற்றும் தாதிமார்களுக்கு கனடாவிற்கு திரும்பி வந்து வேலைசெய்ய விரும்பினால் $150,000 பணம் (Bonus) வழங்குதல் மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான வர்த்தக தடைகளை நீக்குதல்.

## புதிய ஜனநாயகக்கட்சியின் கொள்கைகளில் சில:

* 3,500 புதிய மருத்துவர்களை நியமித்து அனைத்து ஒன்ராறியோ வாழ்மக்களுக்கும் குடும்ப வைத்தியர் கிடைக்கச் செய்தல். சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து $4 பில்லியன் செலவில் நிபுணத்துவ வைத்தியருக்கு காத்திருப்பு நேரத்தைக் குறைத்தல்.



New Democratic Party of Ontario leader Marit Stiles
Thanks: Wikipedia

* 407 நெடுஞ்சாலையின் தனியாருக்கு சொந்தமான பகுதியை அரசு கொள்வனவு செய்து முழு நெடுஞ்சாலைக்கும் கட்டணம் அறவிடுதலை நிற்பாட்டுதல்.

* பாடசாலைகளை திருத்துவதற்கு $830 மில்லியனை முதலிடுதல், அதிக பாடசாலை பணியாட்களை வேலைக்கு அமர்த்துதல், மாகாணம் தழுவிய பாட சாலை உணவுத் திட்டத்தை அமலாக்கல் மற்றும் பிரஞ்ச் கல்வியில் முதலிடுதல்.

* 60,000 வீட்டு வசதிகளை உருவாக்குவதன் மூலம் வீடற்றோருக்கு உதவுதல், பூங்காக்களில் தற்காலிக முகாம் அமைத்து தங்குவோருக்கு வீட்டுவசதி வழங்குதல் மற்றும் வீடற்றோர் நிலையை முற்றாக நீக்குதல். சமூக உதவித் திட்டங்களை இரட்டிப்பாக்குதல்.

* குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள ஒன்ராறியோ வாழ்மக்களுக்கு பணவீக்கத்துடன் தொடர்புப்படுத்தி மாதாந்த மளிகை சலுகைப் பணமாக (Grocery Rebate) நான்குபேர் உள்ள குடும்பம் ஒன்றிற்கு மாதம் $122வரை வழங்குதல்.

## பசுமைக்கட்சியின் கொள்கைகளில் சில:

* ஆண்டுக்கு $65,000இற்கு கீழ் வருமானம் உள்ளவர்களுக்கு வருமானவரியைக் குறைத்து அதிக வருமானம் உள்ளவர் களுக்கு வரியை உயர்த்துதல்.

* 60,000 வீட்டுவசதிகளை உருவாக்குவதன் மூலம் வீடற்றோருக்கு உதவுதல், 310,000 மலிவான இலாப நோக்கமற்ற கூட்டுறவு வீடுகளை அமைத்தல்.



Green Party of Ontario leader Mike Schreiner
Thanks: Wikipedia

* Huntsville மற்றும் Bracebridgeஇல் புதிய மருத்துவமனைகள் அமைத்தல்.

* 2030ஆம் ஆண்டிற்குள் 30%ஆன இயற்கைப் பிரதேசங்களையும் நீர்நிலைகளையும் பாதுகாக்க கனடிய மூத்த குடிமக்களின் சமூகங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.

* 2,000 சதுர அடிக்குக் குறைவான வீடுகள் அமைப்போருக்கு மேம்பாட்டுக் கட்டணங் களை (Development Charges) நீக்குதல் மற்றும் முதல்முறையாக வீடு வாங்குவோருக்கு நில பரிமாற்ற வரியை (Land Transfer Tax) நீக்குதல்.

## ஒன்ராறியோ மாகாணப் பொதுத் தேர்தலில் போட்டியிடும் தமிழர்

2025 பெப்ரவரி 27ஆம் திகதி நடைபெற இருக்கும் ஒன்ராறியோ மாகாணப் பொதுத் தேர்தலில் மூவர் பழமைவாதக் கட்சியிலும் ஒருவர் லிபரல் கட்சியிலும் இன்னொருவர் புதிய ஜனநாயகக்கட்சியிலுமாக ஐந்து தமிழர் போட்டியிடுகின்றனர்.

### லோகன் கணபதி



PC: Logan Kanapathi

Markham – Thornhill தொகுதியில் பழமைவாதக்கட்சியின் சார்பில் போட்டி யிடும் லோகன் கணபதி 2018ஆம் ஆண்டில் இருந்தே இத்தொகுதியின் ஒன்ராறியோ மாகாண சட்டசபை உறுப்பினராக இருந்து வருகிறார். லோகன் கணபதி 2006ஆம் ஆண்டில் இருந்து 2018ஆம் ஆண்டுவரை மார்க்கம் நகரசபை உறுப்பினராக இருந்தவர்.

### விஜய் தணிகாசலம்



PC: Vijay Thanigasalam

Scarborough – Rouge Park தொகுதி யில் பழமைவாதக்கட்சியின் சார்பில் போட்டியிடும் விஜய் தணிகாசலம் 2018ஆம் ஆண்டில் இருந்தே இத்தொகுதி யின் ஒன்ராறியோ மாகாண சட்டசபை உறுப்பினராக இருந்து வருகிறார். விஜய் தணிகாசலம் 2024ஆம் ஆண்டில் இருந்து ஒன்ராறியோ வீட்டுவசதி இணை அமைச்ச ராக இருந்து வருகிறார். அதற்கு முன்னர் ஒன்ராறியோ போக்குவரத்து இணை அமைச்ச ராக இருந்தார். ஒன்ராறியோ மாகாண அமைச்சரவையில் இடம்பெற்ற முதல் தமிழர் இவர் ஆவார்.

### யூட் அலோசியஸ்



PC: Jude Aloysius

Scarborough – Guildwood தொகுதி யில் பழமைவாதக்கட்சியின் சார்பில் போட்டியிடும் யூட் அலோசியஸ் 'Canon Canada Inc.'இல் மூத்த தொழில்நுட்பப் பிரதிநிதியாகப் பணிபுரிகிறார். இவர் 30 வருடங்களுக்கு மேல் சமூகத் தொண் டாற்றி வருகிறார். 2013ஆம் ஆண்டில் ராணி எலிசபெத்II அவர்களின் வைர விழா பதக்கத்தைப் பெற்றவர். 2019ஆம் ஆண்டில் முப்பது வருட சமூக சேவைக்காக ஒன்ராறியோ அமைச் சகத்தின் 'ஒன்ராறியோ தொண்டர் சேவை விருது' பெற்றவர்.

### அனிதா ஆனந்தராஜன்



Liberal: Anita Anandarajan

Scarborough North தொகுதியில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிடும் அனிதா ஆனந்தராஜன் 2022ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணப் பொதுத்தேர்தலிலும், லிபரல் கட்சியின் சார்பில் இதே தொகுதியில் போட்டியிட்டு 30% வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்திற்கு வந்தவர். அனிதா ஆனந்தராஜன் ஒட்டாவா பல்கலைக்கழக இளங்கலை விஞ்ஞானப் பட்டதாரி. பல காலமாக மனிதவளத்துறையில் பணி யாற்றி வந்தவர்.

### தட்சா நவநீதன்



NDP: Thadsha Navaneethan

Scarborough North தொகுதியில் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடும் தட்சா நவநீதன் OPSEU /SEFPOஇல் மனித உரிமைகள் அதிகாரியாக பணியாற்றி யவர். தட்சா நவநீதன் ஸ்காபரோவில் பாடசாலை நிறைவு பெற்ற பின்னர் நடைபெறும் நிகழ்வுகளின் (After School Programs) ஒருங்கிணைப்பாளராகவும் பல இலாபநோக்க மற்ற நிறுவனங்களின் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

# தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலை

## – முகிலன் –

இலங்கை தமிழரசு கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரணம், அந்தக் கட்சியின் எதிர்காலத்தை நிச்சயமற்றதாக்கி இருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்தவர் மாவை சேனாதிராஜா. அதற்கு முன்னர் 10 ஆண்டுகள் அவர் கட்சியின் பொதுச் செயலாளராக பதவி வகித்திருந்தார்.

இரா. சம்பந்தன் உயிருடன் இருந்த கால கட்டத்திலேயே தமிழரசுக் கட்சிக்குள் குழப்பங்கள் மேலோங்கத் தொடங்கி இருந்தன. சம்பந்தனின் மரணத்துக்குப் பின்னர் அக்குழப்பங்கள் உச்சக்கட்டத்தை அடைந்து, தமிழரசு கட்சிக்குள் இரண்டு அணிகள் உருவாகும் நிலை ஏற்பட்டது.

இந்தச் சூழலின் விளைவாக, மாவை சேனாதிராஜா கட்சியின் தலைவராக இருந்து வழிநடத்த முடியாத நிலை ஏற்பட்டது. நியாயத்தின்படி செயல்படுவதா அல்லது அநீதிக்குத் துணை போவதா என்ற சிக்கலான சூழலில், அவர் காணப்பட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு அவர் ஆதரவளிக்க முனைந்தது, கட்சிக்குள் அவருக்கு எதிரான அணியை கோபப்படுத்தியது. அதன்விளைவாக பொதுத்தேர்தலில் அவர் ஓரம் கட்டப்பட்டார்.

கடைசியில் அவரிடம் இருந்து தலைமைப் பதவியும் பறித்தெடுக்கப்பட்டது. அவரது விருப்பத்துக்கு மாறாக பறித்தெடுக்கப்பட்ட தலைமைப் பதவி தொடர்பாக, ஏற்பட்ட அழுத்தங்கள், அதனைத் தொடர்ந்து கட்சியின் ஒரு பகுதியினர் அவர்மீது ஏற்படுத்திய நெருக்கீடுகளின் தாக்கத்தி னால், அவரது மரணம் நிகழ்ந்திருப்பதாக பரவலான கருத்து நிலவுகிறது.

தமிழரசுக் கட்சிக்காக நீண்டகாலம் உழைத்த, அகிம்சைப் போராட்டத்தில் பங்கெடுத்த, அதற்காக நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்த, ஆயுதப் போராட்ட காலத்தில் ஒத்துழைப்பு வழங்கிய, போருக்குப் பின்னரான கால கட்டத்தில் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இயங்கிய, தலைவர் என்ற வகையில் மாவை சேனாதிராஜா தமிழ் மக்களால் மதிக்கப்படுபவர்.

அவரது பிற்கால அரசியல், கட்சிக்குள் அவரது ஆளுமை கேள்விக்குள்ளாக்கப் பட்டமை போன்றவை, மாவை சேனாதி ராஜா தொடர்பான விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தாலும், நீண்டகால நோக்கில் தமிழ்த் தேசிய அரசியலுக்கு, அவரது பங்காண்மையை யாரும் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது.

அவரது அரசியல் எதிரிகளும்கூட, இரங்கல் குறிப்பில் தமிழ் மக்களுக்காக தொடர்ச்சியாக குரல் எழுப்பி வந்த தலைவர் என்பதை விட்டுக் கொடுக்காமல் பதிவு செய்திருக்கின்றனர்.

ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத் தில் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமை யிலான ஈபிடிபியின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தபோது, தமிழரசுக் கட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்னின்று வழிநடத்தியவர் மாவை சேனாதிராஜா.

அதன்விளைவாக அவர் தீவகத்தில் வைத்து ஈபிடிபியினரால் தாக்கப்பட்டு தலையில் படுகாயம் அடைந்திருந்தார்.

அப்படி அவருடன் எதிரும் புதிருமாக அரசியல் செய்த டக்ளஸ் தேவானந்தாவும் கூட, மாவை சேனாதிராஜாவின் அரசியல் பாதையை, மதிப்புடன் நினைவு கூர்ந்திருக்கிறார். ரணில் விக்கிரமசிங்கவும் கூட அதனை நினைவுபடுத்தி இருக்கிறார். இரா. சம்பந்தன், சுமந்திரன், நீலன் திருச்செல்வம், ஆனந்தசங்கரி போன்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சிங்களத் தலைமைகளுடன் எப்போதும் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்தவர்கள்.

தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுப்ப தாகக் கூறிக் கொண்டாலும், இவர்களின் செயல்பாடுகள் முற்றும் முழுதாக தமிழ்த் தேசிய நலன்களை அடிப்படையாகக் கொண்டதாக இருந்திருக்கவில்லை என்பது வெளிப்படை.

ஆனால், மாவை சேனாதிராஜாவின் அரசியல் அத்தகைய விமர்சனங்களுக்கு உட்பட்ட ஒன்று அல்ல. அவர் இலங்கை யில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களுடன் நெருக்கங்களைப் பேணி வந்த ஒருவர் அல்ல.

அப்படியிருந்தும், தமிழரசுக் கட்சிக்குள் மாவை சேனாதிராஜாவின் வகிபாகத்தை கேள்விக்குள்ளாக்கி, அவரைக் குறை மதிப்புக்கு உட்படுத்த வைத்தோர் இரா. சம்பந்தன் போன்றோர்தான்.

தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது சுமந்திரனின் கை ஓங்கத் தொடங்கியிருக் கிறது. மாவை சேனாதிராஜாவை தள்ளி வைத்துவிட்டு கட்சியைக் கைப்பற்றி விடுவதற்கான முயற்சியில் அவர்கள் முன்னோக்கிச் சென்றிருக்கின்றனர்.




கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து மாவை சேனாதிராஜா நீக்கப்பட்டதுடன், சிவிகே சிவஞானம் தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஏற்கனவே, பதில் பொதுச் செயலாளராக சத்தியலிங்கம் பணியாற்றுகிறார். சுமந்திரன் பேச்சாளராகப் பணியாற்று கிறார். இந்த மூவரும் ஒரே அணியில் இருப்பதால் மாவை சேனாதிராஜாவின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டோர் ஓரம் கட்டப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அவரை நம்பி, அவருக்குப் பின்னால் அரசியல் செய்து கொண்டிருந்தோர், இப்பொழுது நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர்.

அவர்களின் எதிர்கால அரசியல் கேள்வி க்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தற்போதைய தமிழரசுக் கட்சிக்குள் ஆதிக்கம் பெற்றிருப்போர், கட்சியின் நலனைப் பற்றியோ, தமிழ்த் தேசிய நலனைப் பற்றியோ சிந்திக்கக்கூடியவர்கள் அல்ல. இது தமிழ் மக்களுக்குத் தெரிந்த உண்மை.

அப்படியானால் எப்படி நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு எட்டு ஆசனங்களை தமிழ் மக்கள் கொடுத்தனர் என்ற கேள்வி எழலாம்.

தேசிய மக்கள் சக்தியை எந்த நம்பிக்கையில் தமிழ் மக்கள் தெரிவு செய்தார்களோ, அர்ச்சுனா இராமநாதன் மீது அவர்கள் எப்படி நம்பிக்கை வைத்தார்களோ, அதுபோலத்தான், இதுவும்.

தமிழரசுக் கட்சி பல அரசியல் தவறுகளை இழைத்திருக்கிறது. அந்தத் தவறுகளை திருத்திக்கொண்டு பாடங்களைக் கற்றுக் கொண்டு தமிழ் தேசிய அரசியலுக்கு தலைமை தாங்க வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்துக் கிடையாது.

தமிழரசுக் கட்சியுடன் வன்மையாக மோதிக்கொண்டிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம்கூட, அந்தக் கட்சி தமிழ்த் தேசிய அரசியலுக்கு அவசியமானது என்பதை வெளிப்படுத்தி இருந்தார்.

தமிழ் தேசிய அரசியலில் உள்ள எந்த ஒரு கட்சியும் தமிழரசுக் கட்சியை வெறுக்கவோ ஒதுக்கித் தள்ளவோ விரும்பவில்லை.

ஏனென்றால் தமிழரசுக் கட்சியின் 75 ஆண்டு பாரம்பரியம், அதன் போராட்ட வரலாறு என்பன அவ்வாறான ஒரு நிலையைப் பற்றி சிந்திக்கக்கூடிய நிலையைத் தோற்றுவிக்கவில்லை.

ஆனால் தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசிய அரசியல் நலனையும் கவனத்தில் கொள்ளவில்லை, தமிழ் மக்களின் நலன் களையும் கவனத்தில் கொள்ளவில்லை.

வரலாற்றிலிருந்து பாடத்தைக் கற்றுக் கொண்டு அது முன்னோக்கி நகர்வதற்கும் முற்படவில்லை.

கட்சியைக் கைப்பற்றுவதற்குப் போட்டி போடுகின்றவர்கள்,இதன் ஊடாக அடைய நினைக்கின்ற தலைமைத்துவ இலக்கை இலகுவாக எட்டி விடலாம். ஆனால் அதனை தமிழ் மக்கள் அங்கீகரிப்பார் களா என்ற சந்தேகம் உள்ளது.

ஏனென்றால் இன்று தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய அரசியலில் மிகமோசமான விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கிறது. குறிப்பாக மாவை சேனாதிராஜாவின் மரணத்தையடுத்து இடம்பெற்ற சம்பவங் கள் அனைத்தும் அந்தக் கட்சிக்குள் எந்த அளவுக்கு வெறுப்புணர்வும் குரோதங்களும் மேலோங்கி இருக்கின்றன என்பதைக் காட்டுகிறது.

இத்தகைய விரோதங்களும் குரோதங் களும் தமிழ் மக்களின் நலன்களை உறுதி செய்வதற்கு ஒருபோதும் உதவப் போவதில்லை.

சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளிடம் இருந்து தமிழ் தேசிய அரசியலை பாதுகாத்துக் கொள்வதற்கும், உரிமை களையும் உரித்துக்களையும் தக்க வைத்துக் கொள்வதற்கும் போராடிக் கொண்டிருக்கும் சூழலில், உள்விரோதங் களும் குரோதங்களும் ஒட்டுமொத்த சமூகத்தையும் சீர்குலைத்து விடும்.

அத்தகைய ஒரு நிலைக்குள், தமிழ் மக்களை தமிழரசுக் கட்சி கொண்டு சென்று விடக்கூடிய ஆபத்து இருக்கிறது. மாவை சேனாதிராஜாவின் மரணத்துக்குப் பிறகு இடம்பெற்றுவரும் சம்பவங்கள், முன்னெடுக்கப்படும் பிரச்சாரங்கள் எல்லாமே தமிழ்த் தேசிய அரசியலின் சீர்குலைவை வெளிப்படுத்துகின்றன.

இப்படிப்பட்ட நிலையில் சிங்கள பௌத்த தேசியவாதக் கட்சிகள், வடக்குக் கிழக்கை ஆக்கிரமிப்பது என்பது இலகுவானதாகி விடப் போகிறது.



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

**தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்**
**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Vlambaram - February 15, 2025.qxp_Vlambaram-Front 2025-02-14 6:50 PM Page 7



# Tarrifஉம் Trumpஉம்

**ரதன்**

Irving Energy ஒரு கனடிய நிறுவனம். அமெரிக்காவின் நியுஇங்கிலாந்து பகுதிக்கு புறோப்பேன், பெற்றோல் போன்றவற்றை விநியோகிக்கின்றது. இந்நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு பெப்ரவரி முதல் வாரத்தில் ஒரு கடிதத்தை அனுப்பி இருந்தது. அக்கடிதத்தில் டொனால்ட் டிரம்ப்இனால் வசூலிக்கப்படும் சுங்கவரி பெறுமானம் வாடிக்கையாளர்களின் மாதாந்தக் கட்டணத்துடன் அதிகமாக அறவிடப்படும் எனத் தெரிவித்திருந்தது. இது ஓர் உதாரணம். சீனாவிடமிருந்து பொருட்களைப் பெறும் அமெரிக்க நிறுவனங்கள் அதே பொருட்களை வேறு நாடுகளிடமிருந்து பெறுவதற்கு முயற்சிக்கின்றன. எனினும் இது உடனடியாக சாத்தியமற்றது. ஆகக்குறைந்தது ஒன்பது மாதங்களாவது செல்லும்.

'Wall Street Journal'இன் பெப்ரவரி 12ஆம் நாளின் பதிப்பில் டொனால்ட் டிரம்ப் விரும்பும் அமெரிக்கா குறைந்த இறக்குமதி, குறைந்த குடிவரவாளர்கள், குறைவான தொழிலாளர்கள் தொகையைக் கொண்ட மத்திய அரசாங்கம், அதிகளவு தனியார் முதலீடுகளைக் கொண்டிருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது. டொனால்ட் டிரம்ப் மீண்டும் பதவிக்கு வந்தபின்னர் கனடா, மெக்சிக்கோ, சீனா போன்ற நாடுகளிடம் இருந்து அமெரிக்கா அதிகளவு பொருட்களை இறக்குமதி செய்கின்றது. அதே சமயம் இந்த நாடுகள் அமெரிக்காவிடம் இருந்து குறைந்தளவு பொருட்களையே இறக்குமதி செய்கின்றன. எனவே இதனைக் குறைக்க வேண்டும். அதற்காக இந்த நாடுகளில் இருந்து பெறப்படும் பொருட்கள் மற்றும் சக்தி வளத்துக்கு அதிக சுங்கவரி விதிப்பேன் எனக் கூறியிருந்ததார். முதலில் பெப்ரவரி முதல் வாரமாகவிருந்த சுங்கவரி விதிப்பு பின்னர் ஒரு மாதம் பின்தள்ளப்பட்டுள்ளது. அலுமீனியம், இரும்பு போன்றவற்றிற்கு மார்ச் 12இலிருந்து 25 வீதம் வரையிலான சுங்கவரி விதிப்பேன் எனக் கூறியுள்ளார். அலுமீனியம் அதிகளவு கியுபெக் மாகாணத்திலிருந்து ஏற்றுமதியாகின்றது. இரும்பு ஒன்ராறியோவிலிருந்தே அதிகளவு ஏற்றுமதியாகின்றது. Hamilton, Sault Ste. Marie போன்ற நகரங்களில் பல இரும்பு ஆலைகள் உள்ளன.



உலகமயமாதல் உச்சக் கட்டத்திலிருந்த எண்பதுகளின் இறுதிப் பகுதியிலிருந்து மேற்குநாடுகளின் நிறுவனங்கள், குறைந்த வேதனம் மற்றும் குறைந்த விலையில் மூலப்பொருட்கள் உள்ள ஆசிய நாடுகளில் தங்களது தொழிற்சாலைகளை அமைத்தன. இலங்கையில் கட்டுநாயக்கா பகுதியில் உள்ள உடை உற்பத்தி நிறுவனங்கள் ஓர் உதாரணம். இங்கிலாந்தின் பிரபல 'marks and spencer' உடைகள் முன்னர் 'Made in England' என அச்சிட்டு இருக்கும். பின்னர் இவை 'Made in Bangladesh' என்றிருக்கும். இன்று கனடிய, அமெரிக்க சந்தையில் விற்கப்படும் பெரும்பாலான பொருட்கள் ஆசிய நாடுகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தப் புவிசார் நிலை மாற்றங்கள் மேற்கு நாடுகளின் நிறுவனங்களுக்கு மிகப் பெரிய இலாபத்தைப் பெற்றுக் கொடுத்தன. அதேசமயம் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டன. நவீன தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் உலகமயமாதல் ஆகியவை பலரை வேலையற்றவர்கள் ஆக்கின.

புதிய சந்தைகளின் தோற்றங்களும் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தின. உதாரணத்துக்கு கணினிமூலமான 'online shopping' எனப்படும் பொருட்களை வாங்கும் முறையானது பல விற்பனை அகங்களை அதாவது 'online shopping' களை மூடச் செய்தன. கொரோனாக் காலத்துக்கு முன்னரே அமெரிக்காவில் ஐந்நூறுக்கு மேற்பட்ட மோல்கள் மூடப்பட்டுள்ளன. பல மிகப்பெரிய விற்பனை அகங்கள் மூடப்பட்டுள்ளன. 'Sears' ச ஒரு சிறந்த உதாரணம். கனடாவின் மிகப் பழமைவாய்ந்த 'Hudson Bay' மிகப் பெரிய சரிவைக் கண்டுள்ளது. இந்த நிலை மாற்றத்தை அரசியல் தலைவர்கள் உணரவேண்டும்.

டொனால்ட் டிரம்ப் தேர்தலின்போது 'Make America Great Again (MAGA)' என்ற சுலோகத்துடனேயே தேர்தல் பிரச்சாரம் செய்திருந்தார். அவர் வெற்றிபெற்ற பின்னர் கனடாவிற்கும், மெக்சிக்கோவிற்கும், சீனாவிற்கும் அதிக சுங்கவரிகள் விதிப்பேன் என்றார். இதனைத் தொடர்ந்து மெக்சிக்கோவும், கனடாவும் டொனால்ட் டிரம்ப் உடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். டொனால்ட் டிரம்ப் நாட்களைப் பின்தள்ளினார். எனினும் சுங்கவரியில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. கனடாவின் மாகாண அரசுகள் தங்களது பங்கிற்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதற்கு முன்பு ஒன்ராறியோ மாகாண முதல்வர் கனடா-அமெரிக்கா-மெக்சிக்கோ சுதந்திர வர்த்தகவலயத்திலிருந்து மெக்சிக்கோவை நீக்கிவிடவேண்டும் என்று கூறியிருந்தார். அண்மையில் பிரதான வானொலி ஒன்றிற்குப் பேட்டி அளித்த மெக்சிக்கோ பொருளியல் ஊடகவியலாளர் இதனையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஒரே நிலப்பரப்பில் இருக்கும் நாடுகளுக்கிடையில் அதிகளவு ஏற்றுமதி, இறக்குமதி நடைபெறுவது வழமை. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் இவ்வாறேயுள்ளது. இதற்குக் காரணம் பொருட்களை தரை வழியே கொண்டு செல்லக்கூடியதாக உள்ளது. அதேபோல் எண்ணெய் போன்றவற்றிற்கு குழாய்கள் அமைக்கலாம். கடற்போக்குவரத்தும், விமானப் போக்குவரத்தும் அதிக செலவாகும். அவ்வகையில் கனடாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையில் அதிகளவு ஏற்றுமதி, இறக்குமதி இடம் பெறுகின்றது. 1994 தை முதலாம் திகதி நவ்ரா எனப்படும் வட-அமெரிக்க சுதந்திர வர்த்தக வலயம் நடைமுறைக்கு வந்தது. இது பின்னர் 2020 ஆடி முதலாம் நாள் யுஎஸ்எம்சிஏ (ஐக்கிய அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா) எனப் பெயர் மாற்றம் பெற்றது. இவ்வாறான ஒரு சுதந்திர வர்த்தக வலயம் நடைமுறையில் இருக்கும்போதே டொனால்ட் டிரம்ப் இந்தச் சுங்கவரி அறிவித்தலையும் அறிவித்துள்ளார்.

ஒரு விடயம் உலகில் அதிகளவு பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் அமெரிக்கா, சீனாவிற்கு அடுத்தபடியாக உள்ளது. அதிகளவு இறக்குமதி செய்யும் நாடுகளில் அமெரிக்கா முன்னிலையில் உள்ளது. சேவைகள் இறக்குமதி, ஏற்றுமதி இரண்டிலும் அமெரிக்காவே முன்னிலையில் உள்ளது. கனடாவில் இருந்து அமெரிக்கா அதிகளவு எண்ணெய் மற்றும் கனிமங்களைப் பெறுகின்றது. இதனைத் தவிர்த்துப் பார்த்தால் கனடாவே அமெரிக்காவிடமிருந்து அதிகளவு பொருட்களைப் பெறுகின்றது. டொனால்ட் டிரம்ப் குறிப்பிடும் கனடாவினுடனான Trade Deficit – வணிக பற்றாக்குறை, ஐக்கிய அமெரிக்காவின் தேசிய உற்பத்தியின் 0.5 வீதத்துக்கும் குறைவானதேயாகும்.

இந்த சுங்கவரியினை விதிப்பதனால் டொனால்ட் டிரம்பின் அமெரிக்கா பெறப்போகும் இலாபங்கள் என்ன? அமெரிக்க அரசுக்கு அதிக வருமானம் கிடைக்கும். உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கலாம். அதனால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். மக்கள் மத்தியில் அமெரிக்கா என்ற தேசிய உணர்வு மேலோங்கும். அதே மக்கள் பொருட்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்கவேண்டி வரும். அதிக விலை (பொருளின் விலை+சுங்கவரி) பணவீக்கம் அதிகரிக்கும். பொருளாதார தேக்க நிலை உருவாகும்.

மறுபக்கத்தில் கனடாவிற்கு என்ன நட்டம். ஏற்றுமதியாகும் பொருட்களின் விலை அதிகரிக்கும்பொழுது, விற்பனையை சம நிலையில் வைத்திருக்க வேண்டுமானால் சுங்கவரியை பொருட்களின் விலையில் இருந்து குறைத்து விற்க வேண்டிவரும். இல்லையேல் ஏற்றுமதி பாதிக்கப்படும். அவ்வாறு ஏற்றமதி பாதிக்கப்படுமாயின் வேலையற்றோர் தொகை அதிகரிக்கும். இதனால் ஏற்படும் பொருளாதார தேக்க நிலையை சமநிலைப்படுத்த கனடிய அரசு தனியார் நிறுவனங்களுக்கான வரியைக் குறைக்க வேண்டிவரும். அரசுக்கான வரி குறைவடையுமாயின் பல இலவச சேவைகள் மருத்துவம், கல்வி உட்பட பாதிப்படையும்.

The Softwood Lumber Agreement (SLA) ஒப்பந்தம் 2015இல் முடிவுக்கு வந்தபொழுது ஒப்பந்தத்தைமீறி சுங்கவரி விதித்தமைக்காக அமெரிக்கா கனடிய உற்பத்தியாளர்களுக்கு 5 பில்லியன் டொலரை வழங்கியிருந்தது. இதேபோல் கனடா-அமெரிக்கா-மெக்சிக்கோ சுதந்திர வர்த்தக வலயத்தின் ஒப்பந்தத்தை மீறி அமெரிக்கா செயல்படுவதாக குற்றச்சாட்டுக்கள் மெக்சிக்கோ, கனடா தரப்பில் இருந்து தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன. 1982ஆம் ஆண்டிலிருந்து பலகைகளுக்கான விலைப் பிரச்சினை அமெரிக்காவிற்கும், கனடாவிற்குமிடையில் நடைபெறு கின்றன. டிரம்ப்க்கு முன்பாகவே அமெரிக்கா 14%சுங்கவரியை விதித்துள்ளது.

டொனால்ட் டிரம்பின் சுங்கவரி அதிகரிப்பு அமெரிக்காவிற்கு இது முதல் தடவை அல்ல. சுமார் 95 வருடங்களுக்கு முன்பாக 1930 ஆனி மாதம் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி Herbert Hoover ஆல் Smoot-Hawley Act அமலுக்கு வந்தது. இது அமெரிக்க விவசாயிகளின் நலன்களுக்காக எனக் கூறப்பட்டது. கனடா, ஸ்பெயின், பிரான்ஸ் உட்பட்ட பல நாடுகளிலிருந்து இறக்குமதியாகும்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்



## நாமும் நமது இல்லமும் 672

# ஆதன வியாபாரத்தில் 2025ஆம் ஆண்டின் எதிர்வு கூறல்



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

பெப்ரவரி 05, 2025 புதன்கிழமையன்று ரொறொன்ரோ பெரும்பாக ஆதன சம்மேளனம் (TRREB–Toronto Regional Real Estate Board) தனது வருடாந்த நிகழ்வை ரொறொன்ரோவில் நடத்தியது.

பொதுவாக இந்நிகழ்வு, ரொறொன்ரோவில் ஆதன வியாபாரம்பற்றி ஆழமான அறிவினைக்கொண்ட ஜேசன் மேசர் (Jason Mercer) தனது அறிக்கையை தெளிவுப் படுத்தியிருந்தார். ஏறக்குறைய கடந்த பத்து (10) வருடங்களாக இந்த நிகழ்வில் கலந்து வருகின்றேன். பொதுவாக இவரின் அறிக்கை கனடியர்களால் ஏற்புடையதாகவே காணப்படுகின்றது.

இவரின் 2025ஆம் ஆண்டிற்கான எதிர்வு கூறல்களைப் பற்றி பார்ப்போம்.

விற்கப்படும்/ வாங்கப்படும் ஆதனங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும்.

ஆதனத்தின் சராசரி விலையிலும் அதிகரிப்பு ஏற்படும்.

| ஆதன வியாபாரம் | |
|---|---|
| 2024 | 67,609* |
| 2025 (எதிர்வு) | 76,000* |

(No. of Units)

இந்த எண்ணிக்கை 2021ஆம் ஆண்டில் TRREBஇன் சரித்திரத்தில் அதிகூடியதாக 120,000* ஆகக் காணப்பட்டது.

| சராசரி விலை | |
|---|---|
| 2024 | $1,117,623 |
| 2025 (எதிர்வு) | $1,147,000 |

அதிக வியாபாரத்திற்கும், விலை அதிகரிப்பிற்கும் முக்கிய காரணம் வட்டி வீதம் இறக்கம். இப்பொழுது கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 3% ஆகவும், 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 5%ஆகக் காணப்பட்டது.

| FAST FACT |
|---|
| GTAஇன் சராசரி குடும்ப வருமானம் $155,000 |

GTAஇல், 2024இல் புதிதாக நிர்மாணம் செய்ய இருக்கும் ஆதன வியாபாரம் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 47% இனால் இறங்கியது.

| GTA Pre construction Sale | | |
|---|---|---|
| 2023 | 2024 | Down |
| 18,609 | 9,816 | 47% |

கடந்த 10 வருடங்களில் சராசரியாக விற்கப்பட்ட அடுக்குமனை அலகுகளின் (Sold Units) எண்ணிக்கை 23,000.

2024ஆம் ஆண்டில் டிசெம்பரில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அடுக்குமனை அலகுகள் 70,000 (Under Consruction).

### ஆதன வியாபாரத்தை அதிகரிக்க, ஆதன ஆய்வாளர்களால் முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள்

* புதிய ஆதனம் கட்டுவதற்காக அரசுகளால் பெறப்படும் பணத்தின் பெறுமதியைக் குறைத்தல் (Reduce Development Charges).

* HST Rebate: புதிதாக நிர்மாணம் செய்யும்போது HST (Harmonized Sales Tax) அறவிடப்படுகின்றது. இதில் மாற்றம் தேவை. 1990ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட இந்த வரியானது எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை.

* ஆதன விலை அதிகரிப்பால், அதிக வரியைக் கொள்வனவாளர்கள் செலுத்துகின்றனர். மக்கள் அதிக பணத்தை மீளப் பெறுவதற்கேற்ப, மாற்றங்கள் தேவைப்படுகின்றது.

* நிலமாற்றுவரியில் (Land Transfer Tax) இறக்கம் ஏற்படுத்துதல்: முதல் தடவையாக ஆதனம் வாங்குவோருக்கு நிலமாற்று வரியைக் குறைத்தல் வேண்டும். முதல் தடவை ஆதனம் வாங்குவோர் அதிகமானவர்கள், ஆதன சந்தையில் இருப்பதால், இவர்களை ஊக்குவிப்பதற்கேற்ப மாற்றங்கள் தேவை.

* ஆதன வரி அல்லது சோலை வரி (Property Tax): உள்ளூராட்சி சபைகள் தமது பணப்பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக ஆதன வரி/சோலை வரியை வருடா வருடம் அதிகரிப்பதால், ஆதன உரிமையாளர்களின் மாதாந்தச் செலவு அதிகரிக்கின்றது. ஆதன விலையில் ஏற்கனவே ஏற்பட்ட அதிகரிப்பால், ஆதன வரி/ சோலை வரியும் அதிகரிக்கின்றது.

* ஆதன உரிமையாளர்கள் Vs வாடகையாளர்கள்: இவர்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளை குறுகிய காலத்தில் தீர்த்து வைப்பதன்மூலம், அதிக முதலீட்டாளர்களை மீண்டும் ஆதனச் சந்தைக்குக் கொண்டுவர முடியும்.

இதற்கேற்ப சட்டங்களில் சில திருத்தங்கள் ஏற்படுத்த வேண்டும்.

இன்றைய காலத்தல், ஒரு குடும்பத்தின் வருமானத்தின் 60%ஆன வருமானம் ஆதனம் சம்பந்தமான செலவிற்கே செல்கின்றது. இதனால் ஆதனத்தை வாங்குவதற்குக் கனடியர்கள், குறிப்பாக ரொறொன்ரோ பெரும்பாகத்தில் கொள்வனவு செய்வதற்குத் தயங்குகின்றனர்.

அத்துடன் ரொறொன்ரோவின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால், பலர் ரொறொன்ரோவைவிட்டு வெவ்வேறு நகரங்களிற்கும், மாகாணங்களிற்கும் குடிபெயர்வதனையும் காணக்கூடியதாக உள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, மாற்றங்களை மூன்று அரசுகளும் கனடியர்களுக்கு செய்து கொடுப்பதனால், ஆதன வியாபாரம் மீண்டும் உற்சாகத்துடன் செயல்படும் என எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே அமெரிக்காவில் ஏற்பட்ட புதிய அரசினாலும் அதன் தலைவராலும் அதிகமான வரியை கனடாமீது வசூலிக்க இருப்பதாக தெரியவருகின்றது. அவ்வாறு ஒரு நிலைமை ஏற்பட்டால் மேற்கூறப்பட்ட எதிர்வு கூறல்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.

## புதிய அரசின்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

மாற்றம் மாற்றம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், அந்த மாற்றத்தை ஏற்படுத்த காலதாமதப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

மின்சாரப் பிரச்சினை இத்தோடு தீர்ந்து போனால், அவர்கள் தப்பித்தனர். மாறாக, இது நீடித்துச் செல்லுமேயானால் நிலைமை விபரீதமாகி விடும்.

கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராகவும் இப்படித்தான் மக்கள் மத்தியில் ஏமாற்றம், விரக்தியாக மாறியது, பின்னர் அது கோபமாகியது. கடைசியில், பெரும் எதிர்ப்புப் புரட்சியாக வெடித்தது.

இந்த அரசாங்கத்தின் போக்கு, அத்தகையதொரு நிலையைத் தவிர்க்கக் கூடியதாகத் தெரியவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை நினைவுபடுத்துவது பொருத்தம்.



செப்ரெம்பர், 2025, அனுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்தபின்னர், "இந்த அரசாங்கமும்கூட, கடைசியில் காப்பாற்றுமாறு ரணில் விக்கிரமசிங்கவிடம்தான் கேட்க வேண்டி இருக்கும்" என ரணிலின் கட்சியினர் கூறியிருந்தனர்.

## Tarrifஉடம்....

07ஆம் பக்கத்தொடர்ச்சி

பொருட்களுக்கு 20 வீதம்வரை சுங்கவரி விதிக்கப்பட்டது. பதிலுக்கு கனடாவும் பதினாறு பொருட்களுக்கு அதிக சுங்கவரி விதித்தது. இது அமெரிக்காவின் ஏற்றுமதியின் மூன்றில் ஒரு பங்காகும். பொருளாதார தேக்கநிலை மிகவும் மோசமடைந்தது. அமெரிக்கப் பொருளாதாரம் மிகவும் பலவீனமானது. அமெரிக்க ஏற்றுமதி 60 வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அடுத்த பொதுத் தேர்தலில் Herbert Hoover தோல்வியடைந்தார். வெற்றி பெற்ற ரூஸ்வெல்ட் நிலைமையை மாற்ற கடும் முயற்சி செய்தே நிலைமை சீரடைந்தது.

இவ்வாறான அனுபவங்கள் இருந்தும் ஏன் டொனால்ட் டிரம்ப் இந்த முயற்சியில் இறங்கியுள்ளார். டிரம்ப் 1.0ஐவிட டிரம்ப் 2.0இல் அவர் பல சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. 'Brics' என்னும் அமைப்பு பலமாக முன்னேறி வருகின்றது. அமெரிக்க டொலருக்கு மாற்றாக வேறு நாணயங்கள்மூலம் உலக வணிகம் நடைபெறுவதற்கான முயற்சிகள் ஓரளவிற்கு வெற்றியடைந்துள்ளது. இந்தியா-ருசியா போன்ற நாடுகள் அமெரிக்க டொலர்களைத் தவிர்த்தே தங்களுக்கிடையில் வணிகத்தை மேற்கொள்கின்றன. இது அமெரிக்க டொலரை பலவீனமாக்கும். அது அமெரிக்கப் பொருளாதாரத்தையும் பாதிக்கும். உலக நாடுகளில் அதிகளவு இறக்குமதியை அமெரிக்கா செய்வதனால், சுங்கவரி அதிகரிப்பின்மூலம் அந்தந்த நாடுகளுடன் பேச்சு வார்த்தைகள்மூலம் தனக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம். வளங்களைச் சுரண்டலாம். சி.பி.சி இன் அறிக்கை ஒன்றின் பிரகாரம் உக்கிரெயினுக்கு நிதியுதவி வழங்குவதற்கு அமெரிக்கா முன்வைத்துள்ள கோரிக்கை உக்கிரெயினின் கனிம வளங்களாகும்.



கிறீன்லன்ட், பனாமாக் கால்வாய், காசா, கனடா, மெக்சிக்கோ என தனது ஆதிக்கத்தை அதிகரிப்பதன்மூலம் மீண்டும் ஒரு பொருளாதார வல்லரசாக மாறலாம். அதன்மூலம் அமெரிக்க டொலரின் ஆதிக்கத்தை அதிகரிக்கலாம் என்பதே டொனால்ட் டிரம்பின் கனவு. சாத்தியப்படுமா?

இன்றைய நிலையில் அது அமெரிக்காவை மேலும் பலவீனமடையச் செய்யும்.

# வயதானாலும் வெற்றிபெற முடியும் என்பதற்கு நான் உதாரணம்!

## தம்பி ராமையா அவர்களுடனான நேர்காணல் நேர்கண்டவர் – கண்ணன்

தொடர்புகளுக்கு: **647.707.6095**

## ROOM FOR RENT

**MONINGSIDE &OLDFINCH**
2 Bedrooms for rent in a 3 bedrooms walkout bsmt. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.327.3936**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELSON**
2 Bedrooms large size bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.908.6085**

## BASEMENT FOR RENT

**VICTORIA PARK & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, living room, kitchen & laundry. Close to TTC & parkway mall. No alchocol & no smoke. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.420.9394**

## BASEMENT FOR RENT

**BELLAMY & PAINTED POST**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to Cedarbrae mall, bus stop, school & all facilities. Avail. immediately.
**647.535.9630/416.887.8905**

## BASEMENT FOR RENT

# BAYVIEW & 16TH AVENUE

1 Large Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to all facilities. No smoking & no pets. Utilities included. Couple preferred.

**Please Call after 5:00 Pm: 416.707.2800**
If no answer please leave voice mail

Vlambaram - February 15, 2025.qxp_Vlambaram-Front 2025-02-14 6:50 PM Page 15



### BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**

2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to school & all facilities. Avail. immediately.

**416.822.4891/416.388.3501**

### CONDO. FOR RENT

**BRIMLEY & ELLESMERE**

2 Bedrooms & 2 full washrooms condo. for rent. 1 parking. Close to Scar. town centre & all facili ties. Avail. immediately.

**613.769.3432/416.454.6940**

### HOUSE & BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**

3 Bedrooms house & 2 Bed rooms bsmt for rent. Close to Costco & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.662.9935**

### HOUSE FOR RENT

**MORNINGSIDE & GUILDWOOD**

3+1 Bedrooms entire house for rent. 7 Parking. Close to TTC, GO Train & all facilities. Walking distance to Ontario Lake. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.930.9119**

### BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**

2 Bedrooms & 1 washroom basement for rent. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**647.296.7932**

### BASEMENT/ROOM FOR RENT

**WHITES RD & TAUNTON**

**1085 Foxtail Cres. Pickering**

1.5 Bedrooms bsmt for rent. Sep. entrance. 2 Bedrooms for rent in upstairs, Parking. Close to bus stop. Avail. March 01, 2025.

தொடர்புகளுக்கு: **416.786.5816**

### HOUSE/BASEMENT FOR RENT

**BRIMLEY & EGLINGTON**

3 Bedrooms & 1 washroom bangalow house for rent.

**STAINES & STEELES**

1 Bedroom bsmt for rent. Sep. entrance. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.836.0010**

### HOUSE/BASEMENT FOR RENT

**MEADOWVALE & HWY 401**

**SCARBOROUGH** - 5 Bedrooms & 4 washrooms renovated house & 2 Bedrooms bsmt (Separate) for rent. Very close to TTC, school & all facilities. Avail. immediately.

**416.899.4801/647.609.5031**

### BASEMENT FOR RENT

**ELLESMERE & SCAR. GOLF CLUB**

2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. No smoking & no pets. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.998.0181**

### ROOM FOR RENT

**MARKHAM & ELLESMERE**

சாப்பாட்டுடன் அறை உடனடி யாக வாடகைக்கு உண்டு. முதியோர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **416.271.1727**

### HOUSE/BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**

4 Bedrooms house for rent.

**KENNEDY & 14TH AVENUE**

2 Bedrooms bsmt for rent.

தொடர்புகளுக்கு:**905.205.0520**

### HOUSE/BASEMENT FOR RENT

**MORNINGSIDE & STAINES**

3 Bedrooms house & 2 Bed rooms bsmt for rent. Close to bus stop, shopping mall & all facilities. Avail. immediately.

**647.971.6193/416.300.9817**

### ROOM FOR RENT

**BIRCHMOUNT & SHEPPARD**

1 Room for rent in a bsmt. Sep. entrance & parking. Male preferred. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.873.0549**

### ROOM FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**

2 Bedrooms in main unit for rent. Close to bus stop, banks & superstores. Shared Kitchen & washroom. All bills included. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.410.4706**

### HOUSE/BASEMENT FOR RENT

**ALTONA & FINCH**

3 Bedrooms in upstairs & 2 bed rooms in bsmt full house for rent. 3.5 washroom & parking. Close to bus stop, school & stores. Suitable for big family. No smoking & No pets. Avail immediately.

தொடர்புகளுக்கு: **647.535.5014**

### HOUSE/BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**

4 Bedrooms & 3 wash rooms house for rent. 2 Bedrooms & 2 washrooms bsmt for rent.

**416.918.9848/416.857.7603**

### ROOM FOR RENT

**KINGSTON & SHEPPARD**

வேலைக்குச் செல்லும் பெண் களுக்கு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. அனைத்து வசதிகளும் அருகில் உள்ளது.

தொடர்புகளுக்கு: **416.298.0134**

### ROOM FOR RENT

**SCAR.GOLF CLUB & LAWRENCE**

Room for rent. Parking available. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.454.9986**

### HOUSE / BASEMENT FOR RENT

**MARKHAM & 16TH AVENUE**

4 Bedrooms house for rent. 2+1 washrooms. 2 bedroomss bsmt for rent. 3 car parking. Close to South Asiyan, Go station, No Frills & food Basics. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**647.405.1962**

### BASEMENT/ROOM FOR RENT

**KIPLING & THE WESTWAY**

**ETOBICOKE** - 1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. Also 1 Room for rent in upstairs. 1 Min. walk to bus stop. Avail. Feb. 15, 2025.

தொடர்புகளுக்கு:**647.546.5754**

### ROOM FOR RENT

**E SHORE & PORT DAR LINTON - BOWMANVILLE**

1 Bedroom for rent in upstairs. Parking. Couple/single male preferred. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.357.4190**

### ROOM FOR RENT

**TAPSCOTT & FINCH**

2 Bedrooms in Upstairs. Shared washroom & kitchen. Male only. Close to TTC, Centennial College & grocery shopping. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.837.1860**

### ROOM FOR RENT

**MCCOWAN & DENISON**

1 Bedroom for rent. All inclusive. Avail. immediately.

**416.522.3314/437.219.3329**

### HOUSE/BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**

4 Bedrooms house for rent.

**STAINES&MORNINGSIDE**

2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.

**Contact: 647.686.8590**

### BASEMENT/ROOM FOR RENT

**9TH LINE & HOOVER PARK** - 2 Bedrooms & 2 washrooms big bsmt for rent. Sep. entrance & 1 parking. **CONLINS & SHEPPARD** - Rooms for rent. Shared kitchen & washroom & 1 parking.Close to U of T. Single room $800, shared room $900. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.805.3355**

### ROOM FOR RENT

**MARKHAM & SHEPPARD**

1Room for rent. Rent $500 +utility.

**MARKHAM & DENISON**

1 Very large bedroom Rent $1,400. 2 Male preferred. Rooms available $500 & $600. No alcohol, no pets & no smoking. Avail.immediately.

**647.507.2148/647.864.1051**

### HOUSE/BASEMENT FOR RENT

**BAYLY & HARWOOD**

3 Bedrooms house &1 Bedroom walkout bsmt for rent. Close to Ajax Pickering hospital. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.556.4881**

## CONDO. FOR RENT

**WHITES & KINGSTON**

**755 Omega Dr.- PICKERING**

2 Bedrooms & 2.5washrooms Condo. for rent. Close to bus stop & HWY 401 Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.454.6101**

## CONDO. FOR RENT

**BROCK & TAUNTON**

**1695 Dersan St-** 2 Bed rooms & 2.5washrooms Condo. for rent. Open terrace & 1 Parking. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.625.7535**

## CONDO. TOWN HOUSE SALE/RENT

**MCLEVIN & TAPSCOTT**

1 Bedroom + Den & 1.5 washroom Brand new Condo. town house for Sale/rent. Good for Couple. Close to access the bus & all facilities. Avail. February 01, 2025.

**416.831.3784/647.210.6556**

## CONDO. FOR SALE

**DOWNTOWN**

1+ Den newly built Condo. with lots of amenities for sale. Locker also available. Avail. immediately.

**416.918.9848/416.857.7603**

## HOUSE FOR RENT

**MARKHAM & SHEPPARD**

2 Bedrooms & 2 washrooms Two-story Townhouse for rent. Parking, laundry. Close to all major supermarkets, 24Hr Bus with 1 minute walk. No pet or smoke.

தொடர்புகளுக்கு: **416.477.8746**

## HOUSE FOR RENT

**HWY 401 & PORT UNION**

3 Bedrooms bungalow house for rent. 1 Parking. 10Min. walk to all facilities. Rent-2,600+90% Utility.Avail. immediately.

Vivek - **416.418.0477**

## HOUSE FOR RENT

**MARKHAM & LAWRENCE**

3 Bedrooms & 2 full washrooms house for rent. 2 Parking & sep. laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.558.2228**

## HOUSE FOR RENT

**THICKSON & TAUNTON**

**WHITBY -** 4 Bedrooms & 3 washrooms house for rent. Close to No Frills & all facilities. 1 Min walk to bus stop. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.971.2011**

## HOUSE FOR RENT

**WARDEN & HWY 401**

3 Bedrooms & 1 washroom house for rent. 2 Parking.1Min. walk to bus stop. Close to all facilities. Avail. March 01, 2025

**416.414.0439/647.740.8181**

## HOUSE FOR RENT

**MARKHAM & HWY 7**

3 Bedrooms bungalow house for rent. Close to all facilities. Avail. February 01, 2025.

தொடர்புகளுக்கு:**647.883.1054**

## வேலைக்கு ஆள் தேவை

வயதான பெண்மணி ஒருவரை வீட்டிலிருந்து பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை. உணவு, இருப்பிட வசதி. வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647.667.0482**

## வேலைக்கு ஆள் தேவை

**House Keeping & Cooking**

**MARKHAM** பகுதியில் 06:30Am-09:30Amஇற்குமிடையே வீட்டுபராமரிப்பு, சமையல் வேலைகளைச் செய்வதற்கு பெண் தேவை. **MARKHAM** பகுதியில் வாழ்பவர் விரும்பத்தக்கது.

**416.918.9848/416.857.7603**

## JOB VACANCY

**BOOKKEEPER**(Full time)

**LOCATION-** MARKHAM & HWY7

**Requirement -**3 Years experience in bookkeeping. **(Quickbook)**

If you're interested, please contact for more details.

**Contact : 416.879.8911**

## வீடு காணி விற்பனை

யாழ்ப்பாணம் கோண்டாவில் டிப்போவிற்கு அருகாமையில் **2 1/2** பரப்பு உறுதிக்காணி 5 அறைகள் 2 குளியலறையுடன்கூடிய புதிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு**416.505.4449**

## சமையல் ஆள் தேவை

**MARKHAM** பகுதியில் உள்ள வயதான ஒருவருக்கு 2 நேர சாப்பாடு சமைத்து வழங்குவதற்கு ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு: **416.904.9781**

## நிலா திருமணசேவை

கனடாவில் வாழும் 30, 31 வயதுடைய மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களை கனடாவில் தேடுகிறோம். (Visit Visaவில் உள்ள மணமகளும்) கனடாவில் வாழும் 28, 29, 30 வயதுடைய Charted Accountant, Mechanical Engineer ஆக புணிபுரியும் மணமகன்களுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: **437.772.8129**

## BARBER WANTED

**MARKHAM & SCARBOROUGH**

பகுதியில் சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு சிகை அலங்கரிப்பாளர் **(BARBER)** உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு:**416.880.4829**




## DIGITAL PRINTING SHOP FOR SALE

**PRINT N COLOUR - ELLESMERE & KENNEDY**

All new Technology. No need Experience. We will train. 1 Month free training. introducing all technique & all suppliers.

அச்சகம் விற்பனைக்கு உண்டு. இலவச பயிற்சி மற்றும் வியாபார வழிகாட்டல்கள், மற்றும் வாடிக்கையாளர் தொடர்பான விபரங்கள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647.655.7207**

## அலுவலக வேலைக்கு ஆள் தேவை

Scarborough பகுதியிலுள்ள **WINDOWS & DOORS** தொழிற்சாலையில் அலுவலக வேலைகளைச் செய்வதற்கு கணினி அறிவு (Quickbook, Excel & etc.) Accounts திறமை, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உரையாடக்கூடியவர்கள் தேவை

தொடர்புகளுக்கு: **416.875.4119**

## HOME MAINTENANCE

**உங்கள் வீட்டுத் தேவை எதுவாயினும் அழையுங்கள்**

- Basement • Electric Work • Plumbing work
- Painting • Tile work • Building Maintenance
- General Cleaning (Strip & Wax)
- Carpet, Shambo & Steam Cleaning
- Commercial, Industrial & Residential Cleaning.
- General Maintenance (Grass Cutting, Junk removal)
- Moving for residencial & Commercial (Local & Long distance)
- Airport Ride

போன்ற சகலவிதமான சேவைகளையும் உங்களுக்கு திருப்தியான முறையில் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.

**416.333.5606/647.231.5606**

## CHEF & WAITRESS WANTED

**SCARBOROUGH**இலும் **DOWNTOWN**இலும் அமைந்துள்ள **ENGLISH PUB**இற்கு **minimum 5 years Experienced CHEF & WAITRESS wanted immediately. Full time / Part time**

**Please Contact : 416.566.9994**

wpm Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**
*Oshawa* -Hwy 2 / Trulls Rd - Bungalow (5Brm + 2Bath) [$3475/month]
*Whitby* -Des Newman / Twin Streams -Full ( 3 Brm + 3 Bath + Parking) ($3500/month)
Oshawa - Upper floor Bond/Mcmillan ( 3 Brm + 1 Bath ) Separate entry and laundry ( $2950/month)
*Scarborough* - Morningside/Sheppard ( 2 Brm + 1 Bath ) ($1850/month)
Niagara Falls - Lundy's Lane / Dorchester (4BR 3Bath $3200)

**Available for Rent**
*Oshawa* - Harmony/ Olive - Basement (1Brm + 1 Bath + 1 parking) [$1450.00/month including utilities]
*Scarborough* - Mccowan & Lawrence-Basement (2Brm + 1Bath) [$2,100/month)
*Whitby* - Country Lane & Southwell Ave Basement (2Brm + 1Bath) [$1600/month]
*Mississauga*-Confederation / Burnhamthorpe - Condo (1Brm + 1Bath) [$2300/month]
Scarborough - Morningside/Lawrence main floor(3 Bm + 1 Bath) ($2800)

**BUY / SELL/ LEASE / INVEST**
- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 36 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.
கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999
We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

இலங்கையில் (Sri Lanka)
வீடு, காணி, வியாபார நிலையங்கள்
வாங்க விற்க தொடர்புகளுக்கு
Lanka Global Real Estate
170 Columbuthurai Rd
Jaffna
Email: sales@langaglobal.lk
Phone: 94-77-666-5513
கரு கந்தையா [கனடா] Phone: 1-416-616-7278
அரன் கந்தையா [அவுஸ்திரேலியா] Phone: 61-418-553-6613

# விடாமுயற்சி – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

இந்த வருடம் பெப்ரவரி மாதம் அஜித்தின் நடிப்பில் வெளியான படம் விடாமுயற்சி.

இந்தப் படத்தில் அர்ஜூன் (அஜித்) மற்றும் கயல் (திரிஷா) என்ற கணவனும், மனைவியும் Azerbaijan நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். காதலித்துத் திருமணம் செய்த இவர்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினையால் 12 வருடங்களுக்குப்பின் விவகாரத்துச் செய்யத் திட்டமிட்டுள்ளனர். இதற்காக கயல் Georgia நாட்டில் வாழும் தனது பெற்றோரிடம் திரும்பிச் செல்ல விரும்புகிறார். இது காரில் செல்ல ஒன்பது மணிநேர பயணம் என்பதால் அவர் வேறு வழியில் பயணம் செய்ய முற்பட அர்ஜூன் அவரை தன் காரில் கொண்டு சென்று விட்டு வருவதற்கு முன் வருகிறார்.

இவ்வாறு இருவரும் மக்கள் பாவனை குறைந்த நெடுஞ்சாலையில் பயணிக்கும் போது இளைஞர் குழு ஒன்று அவர்களை மிரட்டுகிறது. இதன் விளைவு என்ன? ஏன் அக்குழு அவர்களை மிரட்டுகிறது? என இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

ஒருநாள் அல்லது ஓர் இடத்தில் மட்டும் நடைபெறும் பல படங்கள் உள்ளன. பெரும்பாலும் இப்படம் இவ்வகையில் அமைகிறது. அஜித்தின் தலைமை நடிப்பில் படம் இருப்பதால் அடுத்ததாக என்ன நடக்கும் என்றும் அவர் எப்பொழுது வில்லனுக்கு எதிராக செயல்படுவார் என்றும் ஆர்வம் ஏற்படுகிறது. இதுவே படத்தின் பலமாகும். அதாவது,



அஜித் போன்ற பிரபல அதிரடிப் பட கதாநாயகன் நடித்தபடியினால் படத்தில் ஆர்வம் இருக்கிறது. வேறு நடிகராக இருந்திருந்தால் படம் மிக மெதுவாகச் செல்வதுபோல தெரிந்திருக்கும்.

அத்தோடு கதாநாயகியும், கதாநாயகனும் கொண்டுள்ள உறவு இதில் வித்தியாசமாக உள்ளது. இருவரும் காதலித்துத் திருமணம் செய்தவர்கள். ஆனால், ஒரு நிகழ்வால் இருவரும் பிரியத் தொடங்குகின்றனர். பின்பு கதாநாயகி, தான் தவறு ஒன்று செய்வதாக உணர்ந்து அவர் விவகாரத்துச் செய்யத் தீர்மானிக்கின்றார்.

படங்கள் பொதுவாக தவறு செய்த கணவரை மீண்டும் மனைவி ஏற்பதுபோல் அமைகின்றன. இதில் தவறு செய்த மனைவியை கணவன் பல படங்களில் வரும் சாதாரண கணவன்-மனைவிகளை விட அதிகமாக விரும்புவது வித்தியாசமாக உள்ளது.

குறிப்பாக இருவரும் பிரியச் சம்மதித்த நிலையில்கூட, மிரட்டப்படும்போது மற்றவர் மீது முழு நம்பிக்கை கொண்டுள்ளதைப் பார்க்க நன்றாக இருந்தது.

இவ்வாறு இவர்களது உறவு படத்தில் முக்கியமாக இருந்தாலும், விரிவாகக் காட்டப்படவில்லை. பிரபல நடிகையாக இருந்தாலும் இப்படத்தில் திரிஷாவிற்கு பெரிதாக பங்கு இல்லை. படத்தின்



தொடக்கத்தில் காட்டிய கதாநாயகன், கதாநாயகியின் வாழ்வுக் காட்சிகள் படத்தின் பிற்பகுதியிலும் கலந்திருந்தால் படம் விறுவிறுப்பாக இருந்திருக்கும்.

'விடாமுயற்சி திருவினையாக்கும்' என்ற படத்தின் விரிவான தலைப்பை கதை நன்றாக உணர்த்துகிறது.

படத்தில் பலமான வன்முறைக் காட்சிகள் இருப்பதால், வித்தியாசமான அதிரடிப் படங்களைப் பார்க்க விரும்புவோர் இப்படத்தைப் பார்க்கலாம்.

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

Vlambaram - February 15, 2025.qxp_Vlambaram-Front 2025-02-14 6:50 PM Page 18



# உலகின் தொன்மைமிக்க நூல் வரலாறும் தொல்காப்பிய நூன் மரபும்



T. சிவபாலு

## கடந்த இதழ் தொடர்ச்சி...

**‘தொல்காப்பிய நூற்பா’:** அறிவினை யுணர்த்துங் கருவி நூலென்ப” (சூத்திரம்:1) என வரைவிலக்கணப்படுத்தி அது அறிவை விருத்தி செய்யத்தக்கதாக இருத்தல் வேண்டும் என்னும் கோட்பாட்டை வைத்து அதன்பின்னர் நூல் எப்படி அமைதல் வேண்டும் என்பதையும் நூல் ஒன்றை ஆக்குவதாயின் பின்பற்ற வேண்டிய முறைகள், கோட்பாடுகள் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

“நூலெனப்படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறு கோளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகனற உரையோடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே”
செய்யுளியல் நூற்பா 159

இதற்கு இளம்பூரணர் “நூலென்று சொல்லப்பட்டது எடுத்துக்கொண்ட பொருளோடு முடிக்கும் பொருண்மை மாறுபடாமற் கருதிய பொருளைத் தாகையானும் வகையானும் காட்டி அதனகத்து நின்று விரிந்து உரையொடு பொருத்தமுடையதாகி நுண்ணியதாகி விளக்குவது நூற்கியல்பு என்றவாறு” உரையை விரித்துக் கூறியுள்ளார். நூலானது எப்பொழுதும் எடுத்துக் கொண்ட பொருளை கருத்து வேறுபடாது இறுதிவரை தரவேண்டும் என்பது தொல்காப்பியர் கூற்று. இதனை 2700 ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியர் வரையறுத்துள்ளார் எனின் அதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மொழி பேச்சுவழக்கில் இருந்திருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை. ஆனால் தொல்காப்பியத்தின் வழிநூலான ‘நன்னூல்’ எப்படிக் கூறுகின்றது என்பதை ஒப்புநோக்கும்போது,

“மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை இயல
முதலும் வழியுமென நுதலிய நெறியின்”
(தொல். மரபியல் – 95)

எனத் தொல்காப்பியர் முதன் நூலும் வழிநூலமென இரண்டாக வகுத்துள்ளமைக்கு மேலாக பவணந்தியார் தனது நன்னூலில் பின்வரும் நூற்பாவினால்,

நூலின் இயல்பு ஏ நுவலின் ஓர் இரு
பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்று ஆய்
நால் பொருள் பயத்து ஓடு எழு மதம் தழுவி
ஐ இரு குற்றம் உம் அகற்றி அ மாட்சி ஓடு
எண் நான்கு உத்தியின் ஓத்து படலம்
என்னும் உறுப்பின் இல் சூத்திரம் காண்டிகை
விருத்தி ஆகும் விகற்ப நடை பெறும் ஏ
முதல் வழி சார்பு என நூல் மூன்று ஆகும்

என்பதான மூன்றாக வகுத்துள்ளார். இங்கு அகத்தியம் என்றோர் நூல் இருந்தமை உண்மையாகில் அதன் வழி நூல் தொல்காப்பியம் என எண்ணித் துணிய முடியும். ஆனால் அங்கனம் ஒரு நூல் இருந்தமைக்கான ஆதாரங்கள் கிட்டில. எனவேதான் பேராசிரியர் அகத்தியலிங்கம் போன்றோர் தொல்காப்பியத்தை முதநூலென்றே கொள்கின்றனர். தொல்காப்பியத்தின் வழிநூலாக நன்னூல் எழுந்துள்ளது என்பதோடு அதற்குப்பின்னால் அதனை விளக்க எழுந்த இலக்கண நூல்களை சார்பு நூல்கள் என்றே கொள்கின்றனர். இவ்விதமே முதநூல், வழிநூல், சார்புநூல் என முத்திறத்தனவாக நூல்களை இலக்கண நூலோர் வகுத்துள்ளமை கண்கூடு.

**நூன் மரபு உத்திகள்:** ‘நூல்’ எழுதப்புகுங்கால் அதற்கான உத்தியைப் பயன்படுத்த வேண்டும் என்பதனை தொல்காப்பியம் கூறுவது போன்று முன்வைப்தோடு ‘ஓர் இருபாயிரம் நூலுக்குத் தேவை என்பதையும் குறிப்பிடத் தவறவில்லை. அத்தோடு முதல் நூல் என்பது அதன் ஆசிரியனால் எழுதப்படுவது என்பதும் அந்த நூலை ஒத்ததாக அதற்கு விளக்கமளிக்கும் வகையில் “முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்து பின்னூன் வேண்டும் விளற்பம் கூறி அழியா மரபினது வழிநூலாகும்” என்பதில் இருந்து மரபு மாறாதவகையில் அதனைத் தழுவியதாக படைக்கப்படுவது வழி நூல் என்று வரையறுக்கின்றார். இதனைவிட முதல் நூலுக்கும் வழிநூலுக்கும் வேறுபாடு உடையதாக மாற்றங்களை உள்ளடக்கியதாக உள்ளது புடைநூல் என வரையறுக்கின்றார். அத்தோடு முதல் நூல் என்பது வேறு யாராவது எழுதாததாக இருத்தல் வேண்டும் என்பதும் முக்கியமானது என்பதும் முன்வைக்கப்படுகின்றது.

அதுவேதானும் ஒரு நால் வகைத்தே. 160.
ஒரு பொருள் நுதலிய சூத்திரத்தானும்
இன மொழி கிளந்த ஓத்தினானும்
பொது மொழி கிளந்த படலத்தானும்
மூன்று உறுப்பு அடக்கிய பிண்டத்தானும் என்று
ஆங்கு அனை மரபின் இயலும் என்ப. 161
மரபுநிலை திரியா மாட்சிய வாகி உரைபடு நூல்தாம்
இருவகை இயல முதலும் வழியுமென நுதலிய
நெறியின” (மரபியல்–95)



வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்
வழி எனப்படுவது அதன் வழியாகும்
வழியின் நெறியே நூல் வகைத்து ஆகும்
தொகுத்தல் விரித்தல், தொகைவிரி மொழி பெயர்த்து
அதர்ப்பட யாத்தலொடு அனை மரவினவே (99)

என்பது தொல்காப்பிய நூற்பாவாகும். இறையனார் களவியல் உரையும் நன்னூலும், யாப்பருங்கல விருத்தியுரையும் நூல்கள் முதல் நூலும், வழிநூலும், சார்பு நூலும் என மூவகையாகும் என்று கூறுகின்றது. ‘முதல்வழி சார்பென நூல் மூன்றாகும்’ என்பது அந்நூற்பாவாகும்.

முனைவன் நூற்குப் பிறன்கோள் கூறாது
தந்திரம் சூத்திரம் விருத்தி மூன்றற்கும்
முந்துநூல் இல்லாது முதல்நூல் ஆகும்

தொல்காப்பியர் காலம், முதனூலின் பின் வழிநூல் எழுந்து வழங்கிய காலமாகும் என்பது ஆய்வாளர்களின் கருத்து. தொல்காப்பியர் முதல் நூல், வழி நூல் என இருவகை நூல்களை முன்வைக்கின்றார். தொல்காப்பியம் ‘தமிழ்கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடியும், முந்துநூல் கண்டும், பின்னர் கிடைத்த இலக்கண விதிகளை முறைப்பட எண்ணியும் தொகுக்கப்பட்ட நூல்’ என்று பரம்பாரணர் தொகுத்த நூலுக்கான பாயிரம் கூறுகின்றது. ‘முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தோனே’ என்பதனால் ஆய்ந்தறிந்து எழுதப்பட்டது என்பது பொருளாகும்.




இதனை பவணந்தி முனிவர் பின்வருமாறு தனது நூலில் வைப்பதைக் காணலாம்.

நூலின் இயல்பே நுவலின் ஓரிரு
பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்றாய்
நாற்பொருள் பயத்தோடு எழுமதம் தழுவி
ஐயிரு குற்றமும் அகற்றிஅம் மாட்சியோ(டு)
எண்ணான்கு உத்தியின் ஓத்துப் படலம்
என்னும் உறுப்பினில் சூத்திரம் காண்டிகை விருத்தி
ஆகும் விகற்பநடை பெறுமே. – நன்னூல் 04

இலக்கண நூல் எழுதுபவன் முன்னே அதிகாரங்களை முறையாக வைக்க வேண்டும். இதனைத் தொல்காப்பியர் அதிகார வகை என்றும் நன்னூலாசிரியர் ஒத்துமுறை வைப்பு என்றும் கூறுவர். பின்னர் இலக்கணப் பொருள்களைக் கூறும்பொழுது, தொகுத்தும் வகுத்தும் கூறல் வேண்டும் என்பதைத் தொல்காப்பியர் தொகுத்துக் கூறல் வகுத்து மெய்ந்நிறுத்தல் என்பர். நன்னூலாசிரியர் தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல் என்பர்.

சிந்தனைக் களம்
(இசை, நடனம்)
இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்
Zoom ID: 845 5391 3078 Passcode: 024 094
உரைத்தொடர் - 48
உரைப் பொருள்
‘இசை வளர்ச்சியில் கோயில்களின் வகிபாகம்’
உரையாளர்
திரு. ந. பரந்தாமன் M.A., M.Phil
(முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)

22 பெப்ரவரி 2025 சனிக்கிழமை 8:00pm-10:30pm (கனடா-ரொறன்ரோ)
23 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை 6:30am- 9:00am (இலங்கை, இந்தியா)
23 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை 12:00am-2:30pm (சிட்னி)
Website: www.chinthanaikkalam.org
E-mail: chinthanaikkalam@gmail.com

தமிழ்
பெப்ரவரி 21
என்னை நேராகப் பார்த்தாலும் தலை கீழாகப் பார்த்தாலும் என்றும் தன்நிலை மாறமாட்டேன்.
இதுதான் உலகத் தாய்மொழியாம் தமிழ்.
வேறு எந்த மொழிக்கும் இந்தத் தன்மை கிடையாது.
தமிழ் அவமானம் அல்ல... அடையாளம்!
உலக தாய்மொழி தின வாழ்த்துகள்

# உறைந்து போகுமா நயாகரா நீர்வீழ்ச்சி?



குரு அரவிந்தன்

நயாகரா நீர்வீழ்ச்சி உறைந்து போயிருப்ப தாக நண்பர் தெரிவித்ததைத் தொடர்ந்து பெப்ரவரி 01, 2025 சனிக்கிழமை அன்று நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்க்கப் போய் இருந்தேன். பலதடவை கனடியப் பக்கமுள்ள 187 அடி உயரமும், 2,590 அடி அகலமும் கொண்ட பெரிய நீர்வீழ்ச்சிக்கு அருகே படகில் சென்று, அவர்கள் தரும் சிகப்பு நிற மழைக்கோட் அணிந்து தூவானத்தில் நனைந்து 'மெயிட் ஆப் த மிஸ்ட்'ஐப் பார்த்து மகிழ்ந்த எங்களுக்கு உறைந்துபோன நயாகரா வைப் பார்க்க வியப்பாக இருந்தது. மனித மனங்களும் இப்படித்தான் உறைந்து போகுமோ என்று நினைக்க வைத்தது அந்தக் காட்சி.

இதேபோல, அமெரிக்க நீர்வீழ்ச்சியை அருகே சென்று பார்ப்பதானால் நீலநிற மழைக்கோட் அணியக் கொடுப்பார்கள்.

பொதுவாக எந்நேரமும் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழியும் கனடாவின் நயாகரா நகரமா இப்படிக் களையிழந்து காட்சி தருகின்றது என்று நினைத்தேன்.

நான் தங்கியிருந்த ஹோட்டலின் 15ஆவது மாடியில் இருந்து அருகே இருந்த அமெரிக்க நீர்வீழ்ச்சியையும், கனடிய நீர்வீழ்ச்சியையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. வெய்யில் இல்லாவிட்டாலும், உறைந்த நிலையில் இருக்கும் நீர்வீழ்ச்சியைக் காலைநேரம் அழகான படங்கள் எடுக்கக்கூடியதாக வெளிச்சம் இருந்தது.




அமெரிக்க நீர்வீழ்ச்சியும், 'ஹோஸ்சூ' என்று அழைக்கப்படும் கனடிய நீர்வீழ்ச்சியும் உறைந்து போயிருந்தாலும் ஒரு பக்கத்தால் இரைச்சல் எதுவும் இல்லாமல் சிறிதளவு நீர் கொட்டிக் கொண்டிருந்தது. கோடைகாலத்தில் ஒரு நிமிடத்திற்கு 5.9 மில்லியன் கனஅடி நீரைக் கொட்டும் இந்த நீர்வீழ்ச்சி இம்முறை பனிக்காலத்தில் பெரிதாக உறைந்திருந்தது. நயாகரா நீர்வீழ்ச்சியில் விழும் இந்த நீர் சென்ற். லோறன்ஸ் ஆற்றில் கலந்து அட்லாண்டிக் கடலில் கலக்கின்றது. 1885, 1902, 1906, 1911, 1932, 1936, 2014, 2017, 2019ஆம் ஆண்டுகளிலும் பனிப் பொழிவின்போது

உறைந்த நிலையில் நயகராவின் பழைய படம்



இது முற்றாக உறைந்து போயிருந்தது. 2025ஆம் ஆண்டும் முற்றாக உறைந்து போனால் நயாகரா நீர்வீழ்ச்சி மீண்டும் வரலாற்றில் ஒரு சாதனை படைக்கும் என்றே நினைக்கின்றேன்.

கனடாவில் மின்சார உற்பத்திக்கு இந்த நயாகரா நீர்வீழ்ச்சி நீர் பாவிக்கப்படுகின் றது. இதேபோல, 1912ஆம் ஆண்டு உறைந்த பனிக்கட்டியின் மேல் மக்கள் நடந்தபோது, அது உடைந்ததில் மூவர் அதில் அகப்பட்டு இறந்து போயினர். நயாகரா நீர்வீழ்ச்சியில் பலர் பலவிதமான சாகசங்கள் செய்ய முயன்று இறந்து இருக்கின்றனர் அவர்கள் தப்பினாலும் சட்டப்படி அவர்களுக்குத் தண்டனை காத்திருக்கும்.

---

## வயதானாலும்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

பதில்: அவர்கள் காதல்பற்றி கேள்விப் பட்டதும், அர்ஜுன் சார் இந்தத் திருமணத் துக்கு ஒப்புக்கொள்வாரா என்ற கவலை தான் எனக்கு ஏற்பட்டது. ஆனால், அர்ஜுன் சார் கேள்விப்பட்டதுமே ஒப்புக் கொண்டு எங்களை ஆச்சரியப்படுத்தி விட்டார். அவர் சம்பந்தியாக அமைந்ததில் எனக்கு எல்லை இல்லாத மகிழ்ச்சி. என்னைப் போலவே சிரமப்பட்டுப் போராடி தன்னை அடையாளப்படுத்தி மேலே வந்தவர். குடும்பத்தை நேசிக்கிறவர். கோயில் மேல் அன்பு செலுத்துகிறவர். இதனால் எங்கள் இரண்டு பேருக்கும் நடுவில் ஒரே மாதிரி எண்ண ஓட்டங்கள். என் அப்பா, அம்மா இரண்டு பேரும் இப்போது உயிரோட இல்லை. அர்ஜுன் சாரைதான் என் அம்மா - அப்பா இடத்தில் வைத்துப் பார்க்கிறேன். சம்பந்தி ஆனாலும் இப்ப வரைக்கும் சார் என்ற மரியாதையோட தான் கூப்பிடுறேன். என் மனைவி ஆங்கில வருடத்தின் முதல் நாளில் பிறந்தவர், அர்ஜுன் சார் மனைவி தமிழ் வருடத்தின் முதல் நாளில் பிறந்திருக்கார்.

கேள்வி: திரைத்துறையில் நீங்கள் ஒரு மனவள ஆலோசகராகவும் இருப்பதாகத் தகவல்;

பதில்: ஆமாம், இது அதிகம் பேருக்குத் தெரியாது. சின்ன வயசிலிருந்து என்கிட்ட பேசுற நிறையப் பேர் தங்கள் வாழ்க்கை யில் நடந்த விடயங்களை மனம் விட்டுப் பேசுவார்கள். இப்படிப் பேசுகிற நிறைய பேருக்கு நான் ஆலோசனை கொடுத்து அவர்கள் வாழ்க்கையை மாற்றி இருக்கிறேன். என் ஜாதக விசேடம் அப்படி. பலர் என்னுடன் பேசிய பிறகு தற்கொலை எண்ணத்தைக்கூட விட்டிருப்ப தாகச் சொல்லி இருக்கின்றனர். பலரும்



குடும்ப வாழ்க்கையை அமைதியாக வாழ்கின்றனர். "மனைவியிடம் தோற்பதில் கூச்சப்படாதே. குழந்தைகளிடம் முட்டா ளாக நடிப்பதில் பெருமைகொள்." இது தான் என்னிடம் ஆலோசனைக்காக வருவோருக்கு சொல்கிற நட்பான வார்த்தைகள்.

கேள்வி: ஆனால், நீங்களே சில வருடங் களுக்கு முன்பு தற்கொலை பண்ண முயற்சி செய்தபோது நயன்தாராதான் அதைத் தடுத்தது என்றும் பேட்டி ஒன்றில் கூறி இருந்தீர்களே, என்ன நடந்தது?

பதில்: பொதுவாக மனிதர்கள் எல்லோரும் எல்லோருக்கும் ஆலோசனை கொடுப்பர். ஆனால், தனக்கு ஒரு பிரச்சினை வரும் போது தன்னை அறியாமல் தவறு செய்வர். அதுபோல்தான் என்னுடைய வாழ்க்கையிலும் பெரிய தவறு செய்ய இருந்தேன். தற்கொலை செய்யக்கூடாது என்று 'இந்திரலோகம்' படத்தில் பெரிய வசனம் எழுதி இருந்தேன். ஆனால், எனக்கு ஒரு கஷ்டம் வரும்போது தற்கொலைதான் தீர்வு என்று ஒரு மனநிலை வந்தது.

எனக்கு என்னுடைய அம்மாதான் ரொம்பவும் பிடிக்கும். தந்தையும் பிடிக்கும். அவர் திமுகவில் மிகப்பெரிய பற்றுக் கொண்டவர். கவிதைகள் எல்லாம் தாறு மாறாக எழுதுவார். அவரைப்போல என்னால் கவிதை எழுத முடியவில்லை என்றாலும் கொஞ்சம் என்னாலும் எழுத முடியும். அதை வைத்துத்தான் நான் பல படங்களுக்கு வசனம் எழுதி இருக்கிறேன். என்னுடைய அம்மாவிடம்கூட நான் கவிதைகள் அடிக்கடி எழுதிக் கொடுப் பேன். அதில், 'உன்னுடைய மூச்சுக்காற்று இந்த உலகத்தில் வாழும்வரைக்கும் நான் வாழ்ந்தால் போதும் அம்மா' என்றுதான் எப்போதும் எழுதிக் கொடுப்பேன். ஒரு நாள் என்னுடைய அம்மா இறந்து போய்விட்டார். எனக்கு அதைக் கேட்டதும் பெரிய அதிர்ச்சியாகிவிட்டது. அம்மா இல்லை என்றால் நான் இல்லை என்று தான் நினைத்திருந்தேன். அப்போ என்னுடைய மகனுக்கு கல்யாணம் முடிய வில்லை. மகளுக்கு மட்டும் கல்யாணம் முடிந்திருந்தது. ஆனாலும் என்னுடைய குழந்தைகள் ஓரளவிற்கு வளர்ந்து விட்டனர். அதனால், "என்னுடைய அம்மா போன இடத்திற்கு நானும் போய்விட வேண்டும்... தற்கொலை செய்ய வேண்டும்; அம்மா இறப்பு செய்தி கேட்டு நானும் இறந்து போய்விட்டேன் என்ற செய்திகள் வந்தால்கூட அது பெருமை தான். தேசிய விருது வாங்கும்போது கிடைக்காத பெருமை அம்மாவோடு மகனும் சேர்ந்து இறந்து விட்டார் என்று செய்தி வரும்போது கிடைக்கும்" என்று எல்லாம் என்னுடைய மனதில் நினைத்துக் கொண்டிருந்தேன்.

அந்த நேரத்தில்தான் நடிகை நயன்தாரா எனக்குப் போன் செய்தார். அப்போது நான் நயன்தாராவோடு 'டோரா' படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருந்தேன். ஒரு நாள் மட்டும்தான் படப்பிடிப்பு நடந்து இருந்தது. எங்கள் அம்மா இறப்பு செய்தி எப்படியோ அவர்களுக்குத் தெரிந்து இருக்கிறது. அவர் போன் செய்து என்னிடம் பேசினார். மனதில் குழப்பமாக நான் இருக்கும்போது நயன்தாரா எனக்கு போன் செய்தது பெரிய திருப்புமுனையாக இருந்தது. பிறகு எதார்த்தத்தைப் புரிய வைத்தார். அதற்குப்பிறகு என்னுடைய தற்கொலைச் சிந்தனையை விட்டேன். அந்தநேரத்தில் நயன்தாரா எனக்கு போன் செய்யவில்லை என்றால் நான் என்ன முடிவு எடுத்திருப்பேன் என்று தெரிய வில்லை. என்னுடைய மகனுக்கு திருமணம் நடக்கும்போது நான் யோசித்துப் பார்த்தேன். அன்று நான் இறந்து போயிருந்தால் இன்று என் பிள்ளையின் கல்யாணத்தை பார்க்க முடியாமல் போயிருப்பேனே. "யாருக்கும் தற்கொலை செய்துகொள்ளும் சிந்தனை வந்தால் தயவு செய்து உங்களுக்கு பிடித்தவர்களிடம் பேசுங்கள். இல்லை என்றால் இருக்கும் இடத்தைவிட்டு தூர மாகச் சென்று நம்மைவிட கஷ்டப்படு வோரைப் பாருங்கள். எல்லோருக்கும் கஷ்டங்கள் வரும், தீர்க்க முடியாத பிரச்சினைகள் இந்த உலகத்தில் இல்லை. இந்த உலகத்தில் நம்மைவிட வேதனைகளைச் சுமந்து பலர் வாழ்கின்றனர். அதனால் தற்கொலை எதற்கும் தீர்வு கிடையாது. கண்டிப்பாக ஒரு நாள் நம்முடைய வாழ்க்கை மாறும்" என்று இப்போது நண்பர்களுக்கு ஆலோசனை கொடுக்கிறேன்.

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# சூரியக் குடும்பக் கிரகங்களின் அணிவகுப்பு



குரு அரவிந்தன்

சோதிடம் மூலம்தான் நாங்கள் முதலில் கிரகங்கள்பற்றி அறிந்திருந்தோம். நவக் கிரகங்கள் என்று சொல்லி ஒன்பது கிரகங்களைக் குறிப்பிட்டனர். ஆனால் அறிவியல் சார்ந்து பார்த்தால், இன்று கிரகங்களின் நிலையை அறிய மட்டுமல்ல, உண்மையாகவே எங்களால் அவற்றைப் பார்க்கவும் முடிகின்றது. 'சோலார் பமிலி' என்று ஆங்கிலத்தில் அழைக்கின்ற எங்கள் சூரியக் குடும்பத்தில் ஒன்பது கிரகங்கள் இருந்தன. ஆனால் அதில் ஒரு கிரகத்திற்கு வேண்டிய தன்மைகள் இல்லாததால், 'புளூட்டோ' என்ற அந்தக் கிரகத்தை வெளியே எடுத்து விட்டனர். இப்பொழுது எட்டுக் கிரகங்கள் மட்டுமே சூரியக் குடும்பத்தில் கணக்கிடப்படுகின்றன.

இப்போது இரவு வானில் சில அதிசயங்கள் நடப்பதை அறிந்திருப்பீர்கள். இந்த அதிசயங்களை 'கிரகங்களின் அணிவகுப்பு' என்று அழைக்கின்றனர். நவீன தொழில்நுட்ப வசதிகள்மூலம் சாதாரண மனிதர்களாலும் இப்போது நடக்கும் கிரகங்களின் அணிவகுப்பைப் பார்க்க முடிகின்றது. இரவு வானத்தைப் பார்த்தால் தெளிவான வானத்தில் ஏராள மான நட்சத்திரங்களைக் காணமுடியும்.

இதில் சூரிய குடும்பத்தைச் சேர்ந்த கிரகங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தூரத்தில் இருப்பதால், எவை என்பதை அடையாளம் காண்பது கடினமானதாகும். இதைக் கருத்தில்கொண்டு இதற்காகக் கணினி மென்பொருளை வடிவமைத்திருக் கின்றனர். உங்கள் செல்போனில் இதைப் பதிவிறக்கம் செய்வதன்மூலம் வானத்தில் அவை இருக்கும் திசையை அறிந்து உங்களால் இலகுவாகப் பார்க்க முடியும்.

பொதுவாக ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட கிரகங்களின் அணிவகுப்புகள் மிகவும் அரிதானவையாகும். 2025 ஜனவரி 21ஆம் திகதி, வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய ஆறு கிரகங்களும் இரவு வானத்தில் அணிவகுத்திருந்ததால், அவற்றைப் பார்ப்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம் அனேகருக்குக் கிடைத்திருந்தது. இந்த அணிவகுப்பில் உள்ள நான்கு கோள்களை சாதாரண கண்களால் பார்க்க முடியும். இவற்றில் யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியவை மிகத் தூரத்தில் இருப்பதால் அவற்றைப் பார்ப்பதற்கு தொலைநோக்கிகள் தேவைப்படுகின்றன.




இந்தக் கிரகங்களின் அணிவகுப்பை சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகுதான் பார்க்க முடியும். செயற்கை ஒளி குறிப்பாகத் தெரு விளக்குகள் இல்லாத இருண்ட பகுதிகளில் இருந்து பார்த்தால் தெளிவாகத் தெரியும். தெளிவான வானம் இருந்தால், உலகின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் இரவில் இந்தக் கிரகங்களின் அணிவகுப்பைப் பார்க்க முடியும், நேரமும் திசையும் மாறுபடலாம்.

இந்த அதிசய நிகழ்வு பெப்ரவரி பிற்பகுதிவரை அதாவது சுமார் ஒரு மாதம்வரை நீடிக்கும் என்று ஆய்வாளர் குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால் இந்தக் கிரகங்கள் இப்போது வானத்தில் இருக்கும் நிலைகளில் அவ்வப்போது மாற்றங்கள் ஏற்படலாம்.

ஒரே நாளில் 7 கிரகங்களும் காட்சி தரும் அதிசய நிகழ்வும் இந்த மாதம் நடக்க இருக்கிறது. பெப்ரவரி 28, 2025ஆம் திகதி, இரவு வானில் ஏற்கனவே காட்சி தரும் 6 கிரகங்களுடன் புதனும் இணைய இருக்கிறது. ஏழு கிரகங்கள் தானே தெரிகின்றன எட்டாவது கிரகம் எங்கே என்று நீங்கள் தேடலாம், அது எங்கும் போய்விடவில்லை உங்கள் காலடியில் தான் இருக்கின்றது. மீண்டும் இப்படியான ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட கிரகங்களின் அணிவகுப்பு 2040ஆம் ஆண்டுதான் நடைபெறும் என குறிப்புகள் தெரிவிக்கின்றன.

நமது சூரியக் குடும்பத்தின் பட்டியலில் 8 கோள்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்தக் கோள்கள் எல்லாம் சூரியனைச் சுற்றி வந்தாலும், வெவ்வேறு வேகத்தில் இவை சுற்றி வருகின்றன. சூரியனுக்கு அருகே உள்ள புதன் கோளை எடுத்துக் கொண்டால் அது சூரியனைச் சுற்றி வர 88 நாட்கள் எடுக்கின்றது. அடுத்துள்ள வெள்ளியை எடுத்துக் கொண்டால் 225 நாட்கள், பூமி சுற்றிவர 365 நாட்கள், செவ்வாய் 687 நாட்கள், வியாழன் 4,333 நாட்கள், சனி 10,759 நாட்கள், யுரேனஸ் 30,687 நாட்கள், நெப்டியூன் 60,190 நாட்கள் எடுக்கின்றன. பூமியிலிருந்து பார்க்கும்போது ஒரே கோட்டில் இவை இருப்பது போலத் தெரிந்தாலும், அவை வெவ்வேறு தூரங்களில் இருக்கின்றன.

## வயதானாலும்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

**கேள்வி: உங்கள் வாழ்க்கைப் பாடமாக நீங்கள் எதைச் சொல்வீர்கள்?**

**பதில்:** சின்ன வயதில் என்னுடைய பெரிய ஆசையே மூன்று வேளை உணவை ஒழுங்காகச் சாப்பிட வேண்டும் என்பது தான். பக்கத்து வீட்டை எட்டிப் பார்க்கும் போது, அங்கே தங்களது ஒரு பையனு க்கு விதவிதமாகப் பலகாரங்கள் செய்து விட்டு, அவனைச் சாப்பிடச் சொல்லிக் கெஞ்சுவார்கள். அப்போதெல்லாம் நாமும் ஒரு பையனாக இருந்திருந்தால் இப்படி சாப்பாட்டுக்கு கஷ்டப்பட வேண்டாமே என நினைத்ததுண்டு. ஆனால், இன்று சொந்த பந்தங்களின் அருமை தெரிகிறது. எனது பெண்ணின் திருமணத்திற்கும் மகனின் திருமணத்திற்கும் எனது தம்பிகள் வந்து தூண்களாக நிற்கும்போது, நெஞ்சை நிமிர்த்தத் தோன்றியது. எது நமக்கு சோகத்தைத் தருகிறதோ அதுவே நமக்கு பின்னாளில் சுகத்தைத் தரும் என்பது நான் கற்றுக்கொண்ட பெரிய பாடம்.

நான் அடிக்கடி என் குழந்தைகளிடம் சொல்வேன், "கோபம் வந்தால் கதவை மூடி விடு. சந்தோசம் என்றால் உடனே அகலத் திறந்து கொள். இதுதான் எனது வாழ்வியல் அனுபவம். நான் சிரமப்பட்ட தற்கு யாரையும் பொறுப்பாளி ஆக்க முடியாது. நான் விரும்பித் தேர்ந்தெடுத்த பாதை இது. "அண்ணே.. எத்தனை வயசானாலும் ஜெயிச்சிர முடியும்னு உங்களைப் பார்க்கும்போதெல்லாம் எங்களுக்கும் நம்பிக்கை வருது" எனப் பல உதவி இயக்குனர்களும் நண்பர் களும் சொல்வர். ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள் சாதனைக்கும் வயதுக்கும் சம்பந்தமே இல்லை. நெஞ்சுக் கூட்டில் தகுதியான ஓர் இலட்சியம் சுற்றிச் சுழலும் போது அது நிச்சயம் நிறைவேறியேயாகும்.

நான் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலைப் பார்த்தேன். விரும்பித்தான் இந்தத் துறைக்கு வந்தேன். சிரமப்பட்ட



போது மீண்டும் பழைய வேலைக்குப் போய்விடலாமே என எனது நெருங்கிய சொந்தங்கள் நினைத்தனர். என் மேல் உள்ள பிரியத்தினால் அவர்கள் வாய் திறந்து சொன்னதில்லை. ஆனாலும் அவர்களுக்கு நான் பதில் சொல்வேன். "திருப்பூர்ல தொலைச்ச பொருள திருப் பூர்லதான் தேடணும். திண்டிவனத்துல தேடக்கூடாது. நான் எடுத்த முடிவ நானே நம்பலைனா எப்படி? இது எனக்கு நானே சொல்லிக் கொள்கிற உத்வேக வார்த்தை களும்கூட. நான் எனது நேரத்தை, முயற்சியை திரைத்துறையிலேயே கழித் திருக்கிறேன். என்னைப் போய் வேறு வேலை பார்க்கச் சொன்னால் எப்படி முடியும்?" என்ற தம்பி ராமையா 'ஷாட் ரெடி' என்ற குரல் கேட்டதும் புன் சிரிப்போடு விடைபெற்றார்.

